www.tamilarangam.net



# இலங்கைத்தீவின் இனங்கள், இனப்பிரச்சினை என்பவை பற்றிய ஒரு வரலாற்று அறிமுகம்

உதயன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இலங்கைத் தீவின் இனங்கள், இனப்பிரச்சினை என்பன பற்றிய ஒரு வரலாற்று அறிமுகம்

— உதயன் —

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முதற்பதிப்பு: சித்திரை 1985

வெளியீட்டு இல: 8.

விலை ரூபா 4-00 மட்டுமே.

★

வெளியீடுபவர்கள்:

மறுமலர்ச்சிக் கழகம்

யாழ். பல்கலைக்கழகம்

யாழ்ப்பாணம்.

# ரவிசேகரனுக்கு...!

இச் சிறுநூல் வெளிவருவதற்கு காரணமாயிருந்த ரவிசேகரன் இப்போழுது எம்மத்தியில் உயிரோடில்லை. ஆயினும், அவனது எண்ணம் நிறைவேறுகின்றது. அவன் மரணமடைவதற்கு சில மாதங்களிற்கு முன்பு என்னைச் சந்தித்து பின்வருமாறு கேட்டான். "உங்களால் ஒரு அலுவல் செய்யமுடியும்! அதைச் செய்வீர்களா?" என்றபோது, என்ன அலுவல்? என்று கேட்டேன். அதற்கு அவர் "போராட்டத்தை முன்னேற்ற வேண்டுமென்றால் சிந்தனைத் தெளிவு அவசியமானது. தற்போது இளைஞர்கள் தெளிவின்றிப் பல்வேறு சிக்கல்களுக்குள் அகப்பட்டுக்கிடக்கின்றார்கள், இக் குறையை நிவர்த்தி செய்ய உதவும் வகையில் தொன்றுதொட்டு இற்றை வரையிலான இலங்கையின் வரலாறு பற்றி ஒரு நூலைத் தயாரிக்க வேண்டும் என்றான். ஓர் முழுமையான நூலை உடனடியாகத் தயாரிப்பது சாத்தியப்படாது. ஆனால் இனங்கள், இனப்பிரச்சனை என்பன சம்பந்தமான விடயங்களை விளங்க உதவும் வகையில் ஓர் அறிமுக நூலை எழுதலாமென்று கூறினேன். அவ்வாறு அதற்கான வேலை ஆரம்பமாகியது.

இதனைத் தயாரிப்பதில் ஈடுபட்டுக்கொண்டிருந்த நாட்களில் இத்தயாரிப்பைத் துரிதப்படுத்துவதற்காக ரவிசேகரன் எனது வீட்டு வாசலில் ஏறி இறங்கிய நாட்களும், அந்தக் காட்சிகளும் என் இதயத்திற் கனக்கின்றன. இச்சிறு நூலை அவனின் பெயரில் சமர்ப்பிப்பதன் மூலம் அந்தக்கனம் சற்றுக்குறையும் ரவி! இந் நூல் பற்றி அவ்வப்போது நீ கலந்துரையாடிய கருத்துக்கள், நீ எழுப்பிய கேள்விகள், இடையிடையே உன் சிரிப்புக்கள் ஆகிய அனைத்தும் என்னெஞ்சிற் பசுமையாக உள்ளன. ரவி! நீ இராணுவத்திடம் அகப்பட்டு உயிர் நீற்பதற்கு மூன்று நாட்களுக்கு முன்னமே இந்நூலின் கையெழுத்துப் பிரதியை உன்னிடம் ஒப்படைத்து விட்டேன் என்பதை எண்ணும்போது எனக்குச் சற்று அமைதியாக உள்ளது.

தமிழீழப் போராட்டம் முன்னேறும்; அவ்வப்போது தடைகளேற்படலாம் ஆயினும் அது சகல தடைகளையும் தாண்டி முன்னேறும். தமிழீழப் போராட்டம் தென்னாசிய மக்களனைவருக்கும் ஓர் ஒளிவிளக்காய்த் திகழும். புதிய சிந்தனை; புதிய சமூக அமைப்பு; புதிய பண்பட்ட வாழ்க்கை முறை என்பன தமிழீழப் போராட்டத்திற்கூடாய் வெளிவரும் தென்னாசியா முழுவதற்கும் அது வழிகாட்டி நிற்கும்.

— உதயன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# முன்னுரை

இலங்கைத் தீவில் இனப்பிரச்சனை மிக மோசமான நிலையை இன்று அடைந்துளது. சிங்கள - பௌத்த மேலாதிக்க இனவாதம் பாரிய ஒடுக்குமுறைகளில் ஈடுபட்டுள்ளது. இப்பிரச்சனையை சரிவர விளங்கிக் கொள்ள வேண்டுமாயின் இலங்கைத்தீவின் முழு வரலாற்றையும் ஆதியிலிருந்து இன்றுவரை ஓரளவாயினும் அறிந்திருத்தல் அவசியம். அவ்வாறு வரலாற்றை அறிந்து கொள்வதன் மூலம் தெளிவான பார்வையும், பரந்த கண்ணோட்டத்தையும், சரியான பாதையையும் வகுத்துக் கொள்ள உதவியாயிருக்கும்.

இந்நூலில் நான்கு பகுதிகள் அடங்குகின்றன. முதலாவது பகுதி ''வரலாற்றின் ஆரம்பத்திலிருந்து ஐரோப்பியர் காலம் வரை'' என்பதாகும். இப்பகுதியில் தென்னிந்தியாவிலிருந்து இலங்கைக்கு ஆதிமனிதன் வந்ததிற் தொடங்கி அம்மனிதக் கூட்டத்திலிருந்து ஈழத்தமிழர், சிங்களவர் ஆகிய பண்பாட்டினங்கள் உருவாகி வளரத் தொடங்கியமையும், பௌத்தம் இலங்கைக்கு வந்தமையும் சிங்கள பௌத்த மேலாதிக்க இனவாதக் கரு உருவாகியமையும், தென்னிந்தியாவிலிருந்து மேற்கொள்ளப்பட்ட படையெடுப்புக்களையும், அதனால் இலங்கைத் தீவில் ஏற்பட்டுச் சென்ற மாற்றங்களையும், இலங்கைத் தீவிற்கு தமிழ் முஸ்லீம்கள் தோற்றத்தையும் விளக்குகின்றது.

இதன் இரண்டாவது பகுதி ஐரோப்பியர் காலமென்பதாகும். இப்பகுதி இலங்கையின் கரையோர மாகாணங்களில் டச்சுக்காரர் ஆதிக்கம் ஏற்பட்டதனையும் அதனைத் தொடர்ந்து இலங்கை முழுவதிலும் ஆங்கிலேயர் ஆதிக்கம் உருவாகி இலங்கையின் சமூக, அரசியற் பொருளாதார வாழ்வில் ஏற்படுத்திய மாற்றங்களையும், ஒற்றையாட்சி நிர்வாக அமைப்பின் கீழ் இனப்பிரச்சனையுருவாகி வந்தமையினையும், எட்டு பௌத்த சங்கத்தின் புத்துயிர்ப்போடு சிங்கள பௌத்த மேலாதிக்க இனவாதம் நவீன வரலாற்று வடிவம் பெற்று வந்தமையும், கொழும்பை மையமாகக் கொண்ட தீர்க்க தரிசனமற்ற தமிழ்த் தலைமையையும், பௌத்த சங்கத்தின் தயவில் சிங்கள பௌத்த மேலாதிக்க இனவாத அரசியற் தலைவர்களின் படிப்படியான வளர்ச்சியினையும் விளக்குகிறது.

''சுதந்திரத்தின் பின்'' மூன்றாவதுபகுதி டி. எஸ். சேனநாயக்கா போன்றவரிடம் ஜீ. ஜீ. பொன்னம்பலம் போன்ற தமிழ் தலைவர்களின் சரணாகதியையும், மலையக மக்களின் வாக்குரிமை, பிரஜாவுரிமை என்பன பாதிக்கப்பட்டதுடன் தமிழ் மக்களின் மொழியுரிமை தடுக்கப்பட்டதினையும் பண்டா – செல்வா ஒப்பந்தம், டட்லி – செல்வா ஒப்பந்தம் என்பன கைவிடப்பட்டதினையும், தமிழ் மக்களின் அகிம்சை வழிப் போராட்டங்கள் தோல்வி கண்டதினையும், இலங்கையிலுள்ள அரசியற் கட்சிகளின் தோற்றத்தினையும் அவற்றின் போக்குகளையும், இடதுசாரிக் கட்சிகளின் தோல்விகளையும் ஜனதா விமுக்திப் பெரமுனயின் (ஜே. வி. பி.) ஆயுதம் தாங்கிய கிளர்ச்சியினையும், அதன் இனவாத தன்மை, தோல்வி என்பனவற்றினையும், பௌத்த சிங்கள மேலாதிக்க இனவாதத்தின் மேலோங்கிய போக்கினையும் விளக்குகின்றது.

நான்காவது பகுதியாகிய ''குடியரசுக்காலம்'' என்பது ''குடியரசு'' அரசியற் திட்டத்தோடு உக்கிரமடையத் தொடங்கிய இன ஒடுக்கு முறைகளையும் அதற்கெதிரான போராட்டங்களையும், அகிம்சைப் போராட்டத்தில் விரக்தி ஏற்பட்டு ஆயுதப் போராட்டம் உருவாகியமை 7ம், தமிழீழக் கோரிக்கை உக்கிரமாக வளர்ச்சி அடைந்து சென்றதினையும், ஐக்கிய முன்னணியின் ஏழாண்டு ஆட்சி முடிய (1970 – 1977) ஐ. தே. கட்சியின் ஆட்சி 1977-ல் ஆரம்பமானதையும் அத்துடன் மேலும் இனப்பிரச்சனை உக்கிரமடைந்து செல்வதினையும் இக்கால கட்டத்தில் இலங்கைப் பிரச்சனை சர்வதேச ரீதியில் பிரபல்யமடைவதையும், தமிழீழப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள இளைஞர் இயக்கங்களின் தோற்றத்தையும், இவ் இளைஞர் இயக்கங்களது போராட்டப் போக்கினையும் விளக்குகிறது.

மொத்தத்தில் இந்நான்கு பகுதிகளிலும் இலங்கைத் தீவின் முழு வரலாறும் மேற்கூறிய அடிப்படையில் மிகச் சுருக்கமாக தொகுக்கப்பட்டுள்ளது. இதன் முதலாவது பகுதியை எழுதுவதில் நான் பெருமளவு கருத்துக்கடன் பெற்றிருக்கின்றேன். இப்பகுதியிலுள்ள முற்பட்டவரலாறு மேலும் ஆய்வுக்குரிய பகுதியாகும். இதில் மேலெழுந்த வாரியாக சில விடயங்களைக் குறிப்பிட்டுச் சென்றிருக்கிறேன். இச் சிறு நூலை எழுதுவதில் பல்வேறு அறிஞர்களின் கருத்துக்களையும் கவனத்திற்கெடுத்து பயன்படுத்தியுள்ளேன். இந்நூலில் சில குறைபாடுகள் இருக்கலாம், இந்நூல் தொடர்பான குறைபாடுகளும், கருத்துக்களும் வாசகர்களால் வெளிப்படுத்தப் படுமிடத்து மறுமுறை இந்நூல் திருத்தத்துடன் வெளிவருமென்பதை கூறிக்கொள்கிறேன்.

தமிழ் மக்கள் நீண்டகாலமாக இத்தீவில் அரசமைத்து வாழ்ந்து வந்திருக்கிறார்கள் என்பதை இந்நூல் விளக்குகின்றது. ஆனால் ஒரு மக்கள் கூட்டம் தன்னை ஒரு தேசிய இனமாக ஆக்கிக் கொள்வதற்கு முற்காலத்தில் அரசமைத்திருக்கவேண்டுமென்று, அன்றி ஓர் தேசிய இனம் தனி இராச்சியம் கோருவ

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நமது முற்காலத்தில் அரசமைக்கவேண்டுமென்றோ அர்த்தமாகாது. இந்நூல் இனவாதத்தையும், இனவாத அடிப்படையில் எழுதப் படும் வரலாற்றையும் முழுமையாக நிராகரிக்கிறது; இத்தீவின் கடந்தகால வரலாறு எவ்வாறு இருந்துள்ளதென்பதை இந்நூல் குறிப்பிடுகின்றது. சரியான வரலாற்றை அறிந்து கொள்வதும் அதனை விளங்கிக் கொள்வதும், பரந்த கண்ணோட்டத்திற்கும் சரியான திட்டமிடலுக்கும் உதவும். உதாரணத்திற்கு குரங்கிலிருந்து மனிதன் தோன்றினன் என்ற கருத்தை அறிவதன் மூலம் மனிதன் குரங்காகி விடுவதில்லை. மாறாக மனிதன் தன்னைப்பற்றிய பரிமாணங் களை விளங்கிக்கொண்டு தான் மேலும் மேலும் உயர்ந்த ஜீவனாக வளர முடியுமென உணர்ந்து திட்டமிடமுடியும்.

பொதுவாக உலகில் முன்பு ஒரு அரசாக இருந்த பகுதி, வரலாற்றின் போக்கில் பல அரசுகளாகப் பிரிந்துள்ளது. முன்பு பல அரசுகளாக இருந்த பகுதி இன்று ஓர் அரசாக மாறியுள்ளது நவீன வரலாற்றில் பொதுவாக பல தேசிய இனங்கள் இணைந்து ஓர் அரசின் கீழ் வாழ்கின்றன. தேசிய இனங்களிடையேயான பிரச்சனையைத் தீர்ப்பதில் சமஷ்டி ஆட்சி முறை ஓர் சிறந்த தீர் வாக வரலாறு கண்டுள்ளது. ஆனால் இலங்கையில் தேசிய இனப் பிரச்சனையைத் தீர்ப்பதில் சமஷ்டி ஆட்சி முறையை ஏற்படுத் தாமை ஓர் துரதிஷ்ட வசமானதே. அவ்வாறு தீர்வு காணப்பு டாமல் தமிழ் மக்கள் ஒடுக்குமுறைக்குட்படும் பட்சத்தில் தமக் கெனத் தனியரசு அமைக்கப் போராடுவது தவிர்க்க முடியாதது. எனவே தமிழீழப் போராட்டமென்பது தவிர்க்கமுடியாத ஓர் வரலாற்று நிபந்தனை. ஒடுக்கப்படும் தமிழ் மக்கள் அந்த நிபந் தனையை ஏற்றுப் போராடுவது அவர்களது கடமையாகும்.

—உதயன்

## ஆதிகாலத்திலிருந்து ஐரோப்பியர் காலம்வரை

இலங்கை இந்தியாவின் தென்முனையிலுள்ள ஒரு தீவாகும். இங் குள்ள 15 மில்லியன் மக்களுள் 26 வீதத்தினர் தமிழ் பேசும் மக்க ளாவர். ஏனையோர் பெரும்பாலும் பௌத்த மதத்தைச் சேர்ந்த சிங்கள மொழி பேசுவோர்களாவர். இலங்கையின் வடக்குக் கிழக் குப் பிரதேசங்களில் பாரம்பரியமாக வாழ்ந்துவரும் தமிழர் இலங் கைத் தமிழர் என அழைக்கப்படுகின்றனர். இதனைவிட இலங்கைத் தமிழரில் சிறு பகுதியினர் இலங்கையின் தென் பகுதிகளில் வேலை வாய்ப்பின் பொருட்டுச் சென்று வாழ்கின்றனர்கள். 19-ம் நூற்றாண் டில் இலங்கையின் மத்திய மலைப்பிரதேசங்களில் அமைக்கப்பட்ட பெருந் தோட்டங்களில் வேலை செய்வதற்காகக் கொண்டுவரப்பட்ட தென்னிந்தியத் தமிழர் இந்தியத் தமிழர் என்றும் மலையகத் தமிழர் என்றும் அழைக்கப்படுகின்றனர். இவற்றைவிடத் தமிழ் பேசும் முஸ்லிம்கள் இலங்கையின் பல பகுதிகளிலும் பரவலாக வாழ்கின்ற போதிலும் கிழக்கு மாகாணத்தில் கணிசமான தொகையிற் செறிந்து காணப்படுகின்றனர்.

இன்று உலகிற் காணப்படும் கூர்மையடைந்த தேசிய விடுதலைப் போராட்டங்களுள் தமிழீழ விடுதலைப் போராட்டமும் ஒன்றாகும். இலங்கைத் தீவில் பல்லின மக்களும் இணைந்து ஓர் அரச அமைப் பின் கீழ் ஒற்றுமையாக வாழமுடியாத நிலைமை பெரும்பான்மை இனமாகிய சிங்கள பௌத்த இனத்தின் மத்தியிலிருந்து தோற்று விக்கப்பட்டதன் விளைவாக தமிழீழ விடுதலைப் போராட்டம் தோற்றம் பெற்றுள்ளது. இன்று சிங்கள பௌத்த இனவாதம் அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்தியத்துடன் கூட்டுச் சேர்ந்து செயற்படு கின்றது. உலக சமாதானத்திற்கும் மனிதகுல முன்னேற்றத்துக்கும் பெரும் சவாலாக அமெரிக்க ஏகாதிபத்தியம் அமைந்துள்ளது. எங்கு அமெரிக்கா இருக்கின்றதோ அங்கு அமைதியும் சமாதானமும் இருக்காது என்று சொல்லுமளவிற்கு அமெரிக்க அரசின் செயற்பாடுகள் அமைந் துள்ளன. உள்நாட்டில் நிலவும் பிரச்சினைகளைப் பயன்படுத்தியோ, அன்றி அங்குள்ள பிற்போக்குச் சக்திகளைப் பயன்படுத்தியோ அமெரிக்கா ஓர் பிராந்தியத்திற் காலூன்றிப் பின்பு அப்பிராந்தியத்தை வேட்டைக் காடாக்கி விடுகின்றது. இவ்வாறான சர்வதேச வேட் டைக்காரனாகிய அமெரிக்காவுடன் சிங்கள பௌத்த இனவாதம் கூட் டுச் சேர்ந்துள்ளதன் மூலம் அது தன் வரலாற்றில் என்றுமில்லாத அளவிற்கு ஒரு கொடுமையான வடிவத்தை இன்று பெற்றுள்ளது. இந்த வகையில் இலங்கையின் தேசிய இனப்பிரச்சினை சார்ந்த ஓர்

www.tamilarangam.net



பொதுவான வரலாற்று பூர்வ அறிமுகத்தைச் செய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இலங்கையில் நிலவும் சிங்கள பௌத்த இனவாதத்திற்கு இனவாத அடிப்படையில் எழுதப்பட்ட வரலாறும் ஓர் கருவியாகப் பயன்படுத்தப்பட்டுவருகின்றது. சிங்கள பௌத்த இனவாதத்தை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட வரலாற்றை ஆதாரமாகக் கொண்டு பாடவிதானங்கள் மூலமாகவும் பத்திரிகைகள், மற்றும் பொதுஜனத்தொடர்பு சாதனங்கள், கலை இலக்கியம் என்பவற்றின் மூலமாகவும் பௌத்த நிறுவனமும், சிங்கள–பௌத்த இனவாத அரசியல் வாதிகளும் இனவாத விஷத்தை அப்பாவிச் சிங்கள மக்களிற்கு ஊட்டிவருகின்றனர்.

சிங்கள பௌத்த இனவாத அடிப்படையில் எவ்வாறு வரலாறு எடுத்துரைக்கப்பட்டு வருகின்றதென்பதை இங்கு சற்று நோக்குவோம். இலங்கை ஓர் சிங்கள பௌத்த நாடு, பௌத்தமதம் தழைத்தோங்குவதற்கெனப் புத்தபிரானால் தேர்ந்தெடுக்கப்பட்ட நாடு (தம்மதீப) என்ற தவறான கருத்து சிங்கள பௌத்த மக்கள் மத்தியில் போதிக்கப்பட்டு வருகிறது. கி. பி. ஆறாம் நூற்றாண்டில் மகாவிகாரையின் பிரதம குருவாயிருந்த மகாநாம தேரர் என்பவரால் எழுதப்பட்ட மகாவம்சம் என்னும் நூலில் மேற்கூறப்பட்ட கருத்தின் அடிப்படை பின்வருமாறு விளக்கப்படுகின்றது. அதாவது ஆரிய இனத்தவனாகிய விஜயன் கி. மு. ஆறாம் நூற்றாண்டு இலங்கைக்கு வந்தான். அந்த விஜயனது வழித்தோன்றலரே சிங்களராவர். விஜயன் இலங்கையிற் காலடி வைத்த நேரமும் புத்தபிரான் பரிநிர்வாணமடைந்த நேரமும் ஒன்றாகும். விஜயன் இலங்கையில் காலடி வைக்கும்போது பரிநிர்வாணமடைந்து கொண்டிருந்த புத்தபிரான் பின்வருமாறு கூறினாராம். இப்பொழுது இலங்கைத்தீவில் காலடி வைக்கும் விஜயனது வழித்தோன்றலரே பௌத்த மதத்தைப் பேணிப் பாதுகாக்கப்போபவர்களாவர். அதன் பொருட்டு அத்தீவையும், மக்களையும் பாதுகாக்குமாறு காவல் தெய்வங்களைப் புத்தபிரான் கேட்டுக்கொண்டார் என்று எழுதப்பட்டுள்ளது. இதன் மூலம் இனம், மதம், மொழி, அரசு, நாடு ஆகிய அனைத்தும் ஒன்றாக இணைக்கப்பட்ட சிங்கள-பௌத்தம் என்ற கருத்து முன்வைக்கப்பட்டு சிங்கள பௌத்தர் அல்லாத அனைவரும் இலங்கையில் அந்நியரே என்ற சிந்தனை உருவாக்கப்பட்டது. தென்னிந்தியா, குறிப்பாக தமிழரே சிங்கள பௌத்தத்தின் எதிரிகள் என்றும் இலங்கையிலுள்ள தமிழர் தென்னிந்தியாவிலிருந்து வந்த படையெடுப்பாளர்கள் என்றும், துட்டகெமுனுவுக்கும், எல்லாளனுக்கும் இடையில் இடம் பெற்ற போர் சிங்கள-பௌத்தத்தை விடுவிக்கத் தமிழருக்கெதிராக நடைபெற்ற போர் என்றும் விளக்கப்பட்டுள்ளது. மேலும் பிற்



காலத்தில் நிகழ்ந்த சோழப் பேரரசின் படையெடுப்பு என்பவற்றை வைத்துக் கொண்டு தமிழரைச் சிங்களவருக்கெதிரான படையெடுப்பாளர் என்று விளக்குவது இலகுவாய் அமைந்துவிட்டது. இந்த வகையில் தமிழர் இந்த நாட்டிற்கு அந்நியரென்றும் அவர்கள் சிங்களவர்க்கெதிரான படையெடுப்பாளர்களாகவே இலங்கைக்கு வந்தார்களென்றும் அவர்களிடமிருந்து சிங்கள பௌத்தத்தைப் பாதுகாக்கவேண்டுமென்றும் சிங்கள-பௌத்த இனவாதிகள் சிங்கள மக்களிற்கு இன்று போதித்து வருகின்றார்கள். ஆனால் நாம் இதுபற்றிய வரலாற்றுண்மையைச் சற்று நோக்கவேண்டும்.

மகாவம்சம் கூறுகின்றவாறு கி. மு. ஆறாம் நூற்றாண்டில்தான் இலங்கைக்கு முதல் முதலாக மனிதன் வந்தானென்றோ அவ்வாறு வந்த மனிதன் ஆரிய இனத்தவனே என்றோ கூறுவது ஆதாரமற்றதும் பிழையானதுமான கூற்றாகும். இலங்கைக்கு ஆரியர் வந்தமைக்கும், இவர்களிலிருந்து சிங்கள இனம் உருவாகியமைக்கும் எவ்வித தொல்லியற் சான்றுகளுமில்லை. மாறாக இலங்கையின் சிங்களப் பண்பாடு தென்னாசியப் பொதுமைக்குள் தென்னிந்திய திராவிடப் பண்பாட்டின் ஒரு பகுதியென்றும் நேர்மையான பல சிங்கள வரலாற்றாசிரியர்களாலேயே ஒப்புக்கொள்ளப்படுகின்றது. இலங்கையின் உண்மையான வரலாறு எவ்வாறெனின் இன்று தீவாகவுள்ள இலங்கை 7000 ஆண்டுகட்கு முன்புவரை இலங்கையின் மன்னார்ப்பகுதியையும் தென்னிந்தியாவின் திருநெல்வேலி மாவட்டத்தையும் இணைக்கும் தரைவழிப் பாதையைக் கொண்டிருந்தது. கி. மு. 50,000 ஆண்டளவில் திருநெல்வேலி மாவட்டத்திலிருந்து இலங்கைக்கு முதல் முறையாக மிருகங்கள் கால் நடையாக வந்து சேர்ந்தன. இதற்குரிய தொல்லியற்சான்றுகள் சிங்கள வரலாற்றாசிரியர்களாற் கண்டெடுக்கப்பட்டுள்ளன. கி. மு. 28,000 ஆண்டளவில் இதே திருநெல்வேலி மாவட்டத்திலிருந்து கால்நடையாக முதல் முறையாக இலங்கைக்கு மனிதன் வந்தான். இவனே இலங்கையின் ஆதி மனிதனுவான். இம்மனிதன் பண்பாட்டைக் குறுணிக் கற்காலப் பண்பாடென்று வகைப்படுத்தியுள்ளனர். இக்குறுணிக் கற்காலப் பண்பாடு திருநெல்வேலி மாவட்டத்தில் கி. மு. 32,000 ஆண்டுகட்கு முன்பு இருந்ததாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இக்குறுணிக் கற்காலப் பண்பாடு யாழ்ப்பாணக் குடாநாடு தவிர்ந்த ஏனைய பாகங்களிற் பரவியிருந்தது. இப்பண்பாட்டுக்குரிய கற்கள் யாழ்ப்பாணக் குடாநாட்டில் இல்லாமையால் இங்கு இம்மனிதன் குடியேறாமலும், பண்பாடு பரவாமலும் விட்டமைக்குக் காரணமாயிருந்திருக்கலாம்.

ஏறத்தாழ 7000 ஆண்டுகட்கு முன் கடல் மட்டம் உயர்ந்ததால் தென்னிந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையேயான தரைப்பாலம் அற்றுப் போனது. இதன்பின் இலங்கையின் குறுணிக் கற் பண்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பாடு தென்னிந்தியாவுடன் தொடர்பின்றித் தனிமைப்பட்டது. ஏறக் குறைய 4000 ஆண்டுகள் இலங்கை தென்னிந்தியாவிலிருந்து தனி மைப்பட்டது. பின்னர் கடல்வழிப் பிரயாண வசதிகள் வளர்ச்சி யடையவே மீண்டும் தென்னிந்தியாவிற்கும் இலங்கைக்குமிடையே யான தொடர்புகள் கி. மு. 1000-ம் ஆண்டளவில் ஏற்படத் தொடங் கியது.

தென்னிந்தியாவிற்கே பிரத்தியேகமான பெருங் கற்காலப் பண் பாடு எனப்படும் ஓர் பண்பாடு கி. மு. 1000 ஆம் ஆண்டளவில் இலங்கைக்கு வரத் தொடங்கியது. பொன்பரிப்பு, கதிரவெளி, யாழ்ப் பாணம் என இலங்கை எங்கணும் பரவலாகப் பெருங்கற் காலப் பண்பாடு பரவத் தொடங்கியது. இக்காலத்திற் தான் யாழ்ப்பாணத் தில் முதன் முதலாகக் குடியேற்றம் நிகழத் தொடங்கியது. இதனைத் தொடர்ந்து இலங்கையில் அரசுகள் தோன்றின. தென்னிந்தியாவில் சேர, சோழ, பாண்டிய அரசுகள் போன்று இலங்கையிலும் அரசு என்ற நிறுவனம் அனைவருக்கும் பொதுவானதொரு பெருங்கற் காலப் பண்பாட்டடிப்படையில் கந்தரோடை, அனுராதபுரம், மகாகம என் னும் இடங்களிற் தோற்றம் பெற்றன. இம்மூன்று அரசுகளும் பின் னர் முறையே நாகநாடு, இராஜஇரட்டை, உறுகுணை என்னும் அர சியற் பிரிவுகளுக்குள் அடி கோலின. யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்ட நாகநாடு ஆதி இலங்கையிற் தனி அரசியற் பிரிவென்பது மகாவம்சம், தீபவம்சம் போன்ற பாளி இலக்கியங்களாலும், சிலப் பதிகாரம், மணிமேகலை போன்ற தமிழ் இலக்கியங்களாலும் அறியப் படுவதாயுள்ளது.

முதலிற் தென்னாசியா முழுவதற்கும், பின்னர் ஆசியாவின் ஏனைய பாகங்களிற்கும் புதியதொரு அலையாகப் பரவிய பௌத்தமதம் கிறிஸ்து சகாப்தத்தின் ஆரம்பத்தில் இலங்கை வந்தது. மகிந்தன் இலங்கைக்கு பௌத்த தூதுவனாக வந்திருந்த போதிலும் இலங்கையி லுள்ள பௌத்தம் குறிப்பாக தென்னிந்தியாவிலுள்ள ஆந்திராவிலும், தமிழ் நாட்டிலுமிருந்தே இலங்கைக்குப் பரவியது. பிற்காலத்தில் சிங்களவராகப் பரிணமித்த மக்களும்சரி தமிழராகத் தொடர்ந்து வாழ்ந்து வந்தவர்களும் சரி பொதுவிற் பௌத்த மதத்தைத் தழுவிக் கொண்டார்கள். கந்தரோடையில் இன்று கண்டுபிடிக்கப்பட்ட தூபி கள் அன்று வாழ்ந்த தமிழ்ப் பௌத்தர்களுடையது. எனவே இலங் கையிற் பௌத்தம் தமிழர், சிங்களவர் என்ற வேறுபாடின்றி அனை வருக்கும் பொதுவாயிருந்தது.

கி. பி. ஆறும் நூற்றாண்டளவில் பௌத்த, சமண சமயங்களுக் கெதிராக இந்து மதம் என்ற அடிப்படையில் சைவ, வைஷ்ணவ சம யங்கள் எழுச்சி பெறவே இந்தியா எங்கும் பௌத்தம் அருகியது.



இலங்கையிலும் தமிழர் மத்தியில் பௌத்த மதம் அருகத் தொடங்கி யது. இந்நிலையில் அனுராதபுர அரசில் பௌத்தத்தைப் பேணுவதற் கான முயற்சிகள் அனுராதபுரத்திலிருந்த பௌத்த சங்கத்தால் மேற் கொள்ளப்பட்டன. இந்த வகையில் பௌத்தத்தைக் காப்பதற்காக பௌத்த சங்கத்தால் இனரீதியான குரோதத்தை எழுப்பக்கூடிய வர லாறு வேண்டுமென்றே கட்டிவிடப்பட்டது. சிங்களவர் தமிழரி லிருந்து இனம், கலாச்சாரம், மொழி, மதம் என்பவற்றால் வேறு பட்டவர்களென்றும் எந்த வகையிலும் குறிப்பாக இனரீதியாக வேறுபட்ட சிங்கள மக்கள் தமது இனத்திற்கு விசேஷமான பௌத் தத்தைப் பேணிப்பாதுகாக்க வேண்டுமென்ற கதை புனையப்பட்டது. இதன் மூலம் பௌத்தத்தைப் பேணுவதற்கான அடிப்படையை புத்தபிரான் இனம், அரசு ஆகிய அனைத்தையும் ஒன்றாக இணைத்து விட்டார். எவ்வித இன, மத, குரோதமுமின்றி அரசவம்சப் போராக கி. மு. 2ஆம் நூற்றாண்டில் எல்லாளனுக்கும் துட்டகெமுனு வுக்கும் இடையில் இடம்பெற்ற போரை தமிழருக்கும் சிங்களவருக்கு மிடையேயான இன, மதப் போராக வர்ணித்து கி. பி. ஆறாம் நூற்றாண்டில் மகாநாம தேரர் எழுதி வைத்தார்.

தமிழரும், சிங்களவரும் இனரீதியாக வெவ்வேறு இனத்தைச் சேர்ந்தவர்களல்ல, திராவிடத்திலிருந்து தமிழ், தெலுங்கு மலையாளம் என்பன தோன்றியது போலவே திராவிடத்திலிருந்து சிங்கள மக்க ளும் தோன்றினர். சிங்கள மக்கள் ஆரிய இனத்தைச் சேர்ந்தவர்க ளல்ல. தமிழ், தெலுங்கு, மலையாளம், ஈழத்தமிழ், சிங்களம் ஆகிய அனைத்துப் பிரிவு மக்களும் ஒரே இன மொழிக் குடும்பத்தைச் சேர்ந் தோர் என்பதை பல்வேறு மானுடவியல், தொல்லியல், குடிப்பரம் பற் சான்றுகள் என்பனவற்றின் மூலம் இன்று உறுதிப்படுத்தப்பட் டுள்ளது.

தென்னிந்தியாவில் மீண்டும் சைவசமயம் தலை எடுக்கவே கந்த ரோடையைத் தலைநகராகக் கொண்ட நாகநாடு பௌத்தத்தை விட் டுச் சைவத்தைத் தழுவிக்கொண்டது. மற்றைய இரு அரசுகளாகிய அனுராதபுர அரசும், உறுகுணை அரசும் பௌத்தத்தையே தொடர்ந்து பேணிவந்தன. தமிழ் மொழி கி. மு. முதலாம் நூற்றாண்டிலே இலக்கிய வளமுள்ள மொழியாகியது. இதிலிருந்து கிளைவிட்ட மலை யாளமும், தெலுங்கு கி. பி. 8ஆம் நூற்றாண்டிலே இலக்கிய வள முள்ள மொழிகளாகின. இதேபோல சிங்களமும் கி. பி. எட்டாம் நூற்றாண்டில் இலக்கிய வளமுள்ள மொழியாகியது. அவையவை சார்ந்த பிராந்திய வேறுபாடுகளிற்கேற்ப இக்குறிப்பிட்ட வேறுபாடு கள் இயற்கையாகத் தோற்றம் பெற்றன. இதில் உயர்வு தாழ்வு பேசுவதற்கோ அன்றிக் குரோதம் பாராட்டுவதற்கோ ஒன்றுமில்லை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அனைவருக்குமிடையேயான பொதுமையையும் அதேவேளை அவரவர் கட்கிடையேயான தனித்துவங்களையும் அங்கீகரித்துச் செயற்படுவதே மனிதகுல முன்னேற்றத்துக்கு சிறந்த வழியாகும்.

பொய்யாக இலங்கையின் ஆதிவரலாற்றைக் கூறி அதன் அடிப்படையில் இனவாதம் கட்டி எழுப்பப்பட்டுள்ளது. ஆனால் மேற்கூறிய உண்மையான வரலாற்றைப் பார்க்கும்பொழுது இலங்கைக்கு முதலில் வந்தவர்கள் ஆரியர் என்றோ இலங்கை சிங்கள பௌத்தர்களுக்கு மட்டுமே உரிய நாடென்றோ கூறுவது தவறானதென்பது தெளிவாகின்றது. ஒருவேளை இலங்கையிலுள்ள தமிழரும், சிங்களவரும் வெவ்வேறு இனத்தவர்கள் என்று சும்மா வைத்துக் கொண்டாலும், அதில் ஓர் இனத்தவர்தான் முதலில் வந்து குடியேறியவர்கள் என்று எடுத்துக் கொண்டாலும் இனவாதம் தலையெடுக்குமாயின் அதுவும் மிகமிக வெறுக்கத்தக்கதே.

கி. பி. எட்டாம் நூற்றாண்டின் பிற்பட்ட வரலாற்றைத் தொடர்ந்து நோக்குவோம். தென்னாசியப் பொதுப்பண்பாட்டு வட்டத்துக்குள் சிங்களம் தனித்துவமான அங்க அடையாளங்களுடன் தொடர்ந்து வளர்ச்சியடைந்தது. தென்னாசியாவிற் காணப்பட்ட பொதுக் கலாச்சாரத்திலிருந்து குறிப்பாகத் தென்னிந்தியர் கலாச்சாரத்திலிருந்து தனது தேவைக் கேற்ப மாற்ற வேண்டியதை மாற்றித் தனக்கென்று குறிப்பிடக்கூடிய விசேட அங்க அடையாளங்களுடன் சிங்கள பௌத்த கலாச்சாரம் வளர்ச்சியடைந்து வந்தது. இந்த வகையில் உலகிலுள்ள வளர்ச்சியடைந்த நாகரீகங்களுடன் ஒன்றாக வைத்து எண்ணத்தக்க வகையிற் சிங்கள பௌத்த கலாச்சாரம் வளர்ச்சியடைந்தது.

இதே காலத்தில் ஈழத்திற் தமிழும் இப்பிரதேசத்திற்கே உரிய குணம்சங்களுடன் கூடித் தென்னிந்தியத் தமிழிலிருந்தும் சில தனித்துவமான குணம்சங்களுடன் தொடர்ந்து வளர்ச்சியடைந்து வந்தது.

இவ்வாறு இலங்கைத் தீவின் வரலாறு அமைந்து செல்கையில் தென்னிந்தியாவில் சோழ அரசு பேரரசாக வளர்ச்சி அடைந்தது. இந்து சோழப் பேரரசு தென்கிழக்காசிய நாடுகள் வரை சென்று இந்து சமுத்திரத்தின் கிழக்குப் பாகத்தைத் தனது வர்த்தகக் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவர முற்பட்ட ஓர் அரசாகும். இந்த வகையில் இந்து சமுத்திரக் கிழக்குப் பிராந்திய வர்த்தக நடவடிக்கையின் ஓர் அம்சமாக இலங்கைத் தீவை சோழப் பேரரசு கி. பி. பத்தாம் நூற்றாண்டில் கைப்பற்றியது. முதல் முறையாக இலங்கை முழுவதையும் ஒரே ஆட்சியின் கீழ், ஒரே அரசமைப்பின் கீழ் கொண்டு



வந்தது சோழப் பேரரசாகும். இலங்கைத் தீவில் நிலவிய மூன்று அரசுகளும் சோழப் பேரரசின் ஆதிக்கத்திற்குட்பட்டன. அனுராதபுர அரசும், உறுகுணை அரசும் சோழப் பேரரசின் ஆதிக்கத்திற்கு உட்பட்டவிதம் பற்றித் தெளிவான சான்றுகள் உள்ளன. ஆனால் நாகநாடு பற்றி இக்கால கட்டத்திற்குரிய தெளிவான தகவல்கள் போதியளவு இதுவரை கிடைக்காதிருக்கின்ற போதிலும் நாகநாடு எனும் அரசு இருந்து சோழப் பேரரசின் ஆதிக்கத்திற்கு உட்பட்டதென்பதை உணரக்கூடிய சான்றுகள் உள்ளன.

சோழப் பேரரசின் ஆதிக்கத்தின் கீழ் சிங்கள-பௌத்தத்திற்கு குறிப்பிடத்தக்களவு இழப்புக்கள் ஏற்பட்டன. ஒரு பேரரசு இன்னொரு அரசைக் கைப்பற்றுவதால் ஏற்படக்கூடிய பொதுவான இழப்புக்கள் ஏற்பட்டன. சோழப் பேரரசன் ஒருசில பௌத்த பள்ளிகளைக் கட்டுவித்துக் கொடுத்திருந்தாலும் இழப்புக்கள் ஏற்படத்தான் செய்தன. ஓர் பேரரசின் ஆதிக்கத்தின்கீழ் நேர்கணியமாகவோ அன்றி எதிர்மறையாகவோ சில முன்னேற்றங்கள் ஏற்படலாம். ஆனால் பேரரசு ஆதிக்கத்தால் ஏற்படும் இழப்புக்கள், சீர்குலைவுகள் என்பனவே முன்நிலைவகிக்கும். இவ்வாறான சோழப் பேரரசிற்கு எதிரான போராட்டம் தெற்கில் உருவாகின. இறுதியாக பதினொராம் நூற்றாண்டில் முதலாம் விஜயபாகு தலைமையில் இலங்கையிற் சோழப் பேரரசு தோற்கடிக்கப்பட்டது.

வடக்கில் நிலவிய தமிழ் இராச்சியமும் சோழப் பேரரசின் ஆதிக்கத்தின்கீழ் அழிந்து போனதால் வடக்கின் வரலாற்றில் ஓர் குழம்பிய நிலை காணப்படுகின்றது. சோழர் காலத்திற் சோழக் குடியேற்றங்கள் வடக்கில் ஏற்பட்டன. இதுவரை காலமும் இருந்து வந்த மக்களுடன் புதிதாகக் குடியேறியவர்களையும் உள்ளடக்கிய தமிழ் இராச்சியம் நல்லூரைத் தலைநகரமாகக் கொண்டு பதின்மூன்றாம் நூற்றாண்டில் மீண்டும் தோற்றம் பெற்றது.

சோழப் பேரரசு தனது வர்த்தக, இராணுவ வசதிக்காக அனுராதபுரத்திலிருந்த இராஜதானியைப் பொலன்னறுவைக்கு மாற்றியிருந்தது. சோழப் பேரரசிடமிருந்து விஜயபாகு இராச்சியத்தை மீட்ட போதிலும் இராஜதானியாக அனுராதபுரத்தையல்லாமற் பொலன்னறுவையையே வைத்திருந்தான். விஜயபாகு பௌத்தமத புனருத்தாரணங்களில் ஈடுபட்டான். முதலாம் பராக்கிரமபாகு காலத்தில் பொலன்னறுவை இராச்சியம் மேன்மை பெற்று விளங்கியது. தென்னிந்தியாவிற்குப் படை அனுப்பி வைக்குமளவிற்கு பராக்கிரமபாகு பலம் பெற்றிருந்தான். இவனது காலத்தில் நீர்ப்பாசனத்துறை மிகவும் வளர்ச்சி அடைந்தது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கி. பி. 1216-ல் தென்னிந்தியாவிலிருந்து பெரும்படையுடன் வந்த மாகன் பொலன்னறுவையைக் கைப்பற்றினன். இவன் பத்தொன்பது ஆண்டுகள் அரசாண்டான். மாகனது வருகையைத் தொடர்ந்து தம்பதெனியாவிற் சிறு அரசு தோற்றம் பெற்று இறுதியிற் தம்பதெனியா அரசு பலம்பெற்று மாகனைத் தோற்கடித்தது. ஆயினும் தலைநகராகப் பொலன்னறுவ அல்லாமல் தம்பதெனியாவாகவே இருக்க வேண்டியேற்பட்டது. மாகன் பொலன்னறுவாவிற் தோற்ற பின்புதான் யாழ்ப்பாணத்திற் தனிராச்சியம் மீண்டும் தோன்றியது.

தம்பதெனியாவைத் தொடர்ந்து குருணகலை, கம்பளை, றைகம, கோட்டை எனச் சிங்கள இராஜதானிகள் காலத்திற்குக் காலம் மாறிக் கொண்டே சென்றன. இவ்வாறு வடமத்தியிலிருந்து தென்மேற்கு நோக்கிக் காலத்திற்குக் காலம் இராஜதானிகள் மாறிச் சென்றமைக்கு முக்கியமாகப் பாதுகாப்புக் காரணமும் ஒன்றாகும். குறிப்பாகத் தென்னிந்தியாவிலிருந்தும் இலங்கையின் வடக்கிலிருந்தும் ஏற்படும் படையெடுப்புக்களிலிருந்து தப்புவதற்காகவே இவ்வாறு வரலாற்றுரீதியாக இராஜதானிகள் மாற்றமேற்பட்டுச் சென்றன என்று கூறப்படுகின்றது. கி. பி. 1411-ம் ஆண்டுச் சீனப்படை எடுப்புடன் கம்பளை இராஜதானி வீழ்ச்சியடைந்தது என்பதையும் கி. பி. 1360-ம் ஆண்டு யாழ்ப்பாண இராச்சிய மன்னன் கம்பளைமீது போர்தொடுத்து திறைபெற்றுவந்தான் என்பதும் குறிப்பிடத்தக்கது.

கோட்டை இராஜதானியில் தலைசிறந்த மன்னனாக ஆறும் பராக்கிரமபாகு காணப்பட்டான். இவன் சப்புமால் குமரய என்னும் தளபதியின் தலைமையில் யாழ்ப்பாணத்திற்கு ஓர் படையை அனுப்பி வைத்தான். இவன் கி. பி. 1450-ம் ஆண்டு யாழ்ப்பாண அரசை வெற்றி கொண்டான். யாழ்ப்பாண அரசின் மன்னனாயிருந்த கனக சூரிய சிங்கை ஆரியன் தென்னிந்தியாவிற்குத் தப்பி ஓடினன். சப்புமால் குமரயவை கோட்டை அரசன் யாழ்ப்பாண அரசின் மன்னனாக்கினன். 17 ஆண்டுகளின் பின்பு (1467) கனகசூரிய சிங்கை ஆரியனின் வாரிசு தென்னிந்தியாவிற் திரட்டிய படையுடன் வந்து யாழ்ப்பாண அரசை மீண்டும் கைப்பற்றினன்.

பதினைந்தாம் நூற்றாண்டின் மத்தியில் கண்டியில் தனி அரசு தோன்றியது. மாகனது படையெடுப்பைத் தொடர்ந்து வடமத்தியிலிருந்து கண்டிக்குக் குடியேற்றம் நிகழத் தொடங்கியது. இவ்வாறு குடிபெயர்ந்து கண்டியிற் குடியேறியமைக்கு படை எடுப்புகளுடன் வேறு காரணங்களும் உண்டு. 15-ம் நூற்றாண்டின் மத்தியில் யாழ்ப்பாணம், கண்டி, கோட்டை என மூன்று அரசுகள் இலங்கையில் ஆட்சி செய்தன.



பொதுவாக ஈழத்தமிழர் பண்பாடு, சிங்கள-பௌத்த பண்பாடு எனும் இரு பண்பாட்டு ஓட்டங்களை 15-ம் நூற்றாண்டுவரை காண முடிந்தது. ஆனல் சிங்கள-பௌத்தப் பண்பாட்டில் இரு பண்பாட்டு அலகுகள் பிரதேச அடிப்படையில் உருவாகுவதை 15-ம் நூற்றாண்டின் மத்தியில் குறிப்பிடத்தக்க அளவு அடையாளம் காணலாம். ஒன்று கரையோரச் சிங்களவர் என்றும், மற்றையது கண்டிச் சிங்களவரெனவும் இரு கூறுகள் நிலவத் தொடங்கின.

கி. பி. 14-ம், 15-ம் நூற்றாண்டுகளில் குறிப்பிடத்தக்களவு முஸ்லிம் குடியேற்றங்கள் இலங்கையில் ஏற்படுவதைக் காணமுடிகின்றது. இலங்கைக்கு முஸ்லிம்களின் வருகை பற்றிப் பலதரப்பட்ட கருத்துக்கள் நிலவுகின்றன. அவற்றைப் பற்றிச் சற்று நோக்குவோம். 13-ம் நூற்றாண்டுக்கு முற்பட்ட நூற்றாண்டுகளிலேயே இந்தியாவுடன் அராபியரின் வர்த்தகத் தொடர்புகள் ஏற்பட்டிருந்த போதிலும் சோழப் பேரரசின் வீழ்ச்சியின் பின்பு 13-ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் தமிழ் நாட்டில், குறிப்பாகக் காயல் பட்டினத்தில் முஸ்லீம் வர்த்தகக் குடியேற்றம் ஏற்படத் தொடங்கியது. இவ்வாறு காயல் பட்டினம் வந்த முஸ்லீம் வர்த்தகர்கள் அங்கு வாழ்ந்து வந்த தமிழ்ப் பெண்களை மணம் செய்து கொண்டனர். மேலும் வர்த்தகத்தில் இவர்கள் செல்வாக்குப் பெற்று வந்ததன் வாயிலாக அங்கு வாழ்ந்து வந்த மக்களை (குறிப்பாக ஏழைகள்) இஸ்லாத்திற்கு மதம் மாற்றினர். இவ்வாறாக வந்து குடியேறிய வர்த்தகர்கள், கலப்புத் திருமணம் செய்தோர், மதம் மாற்றப்பட்டோர் ஆகிய மூன்றும் இணைந்ததன் வாயிலாக தமிழ் முஸ்லீம் எனும் சமூகம் உருவாகியது. காயல் பட்டினம் இலங்கை வர்த்தகத்துடன் தொடர்புபட்டது. இதன்மூலம் இலங்கைக்கு தமிழ் முஸ்லீம்களின் வருகை தென்னிந்தியாவிலிருந்து 14-ம், 15-ம் நூற்றாண்டுகளில் ஏற்படுவதைக் காணலாம். இலங்கையில் புத்தளம், கல்பிட்டி, கொழும்பு, பேருவளை, அம்பாந்தோட்டை ஆகிய கரையோரப் பகுதிகளிலும் உள்வர்த்தகத்தைப் பொறுத்து நகரப் புறங்களிலும் இந்நூற்றாண்டுகளில் குடியேற்றங்கள் ஏற்பட்டன. இக் குடியேற்றம் நிகழ்வதற்கு முற்பட்ட நூற்றாண்டுகளில் இலங்கையுடன் அராபியர்களின் வர்த்தகத் தொடர்புகள் ஆங்காங்கே இருந்துள்ளன.

முஸ்லீம்களின் இலங்கை வருகை பற்றி இன்னொரு கருத்தும் சொல்லப்படுகின்றது. அதாவது கிறிஸ்து சகாப்தத்தின் ஆரம்பத்திலிருந்தே அராபியர் இலங்கைக்கு வரத் தொடங்கியதாகவும், அராபியாவில் ஏற்பட்ட அரசியற் பிரச்சினை காரணமாக ஒரு பகுதி அராபியர் கி. பி. 7-ம் நூற்றாண்டில் இலங்கைக்கு வந்து குடியேறியதாகவும் அவர்களது சந்ததியினரே இலங்கை வாழ் முஸ்லீம்கள் எனவும் 14-ம், 15-ம் நூற்றாண்டுகளில் ஏற்பட்ட இந்திய முஸ்லீம்களின் வருகை மேலும் முஸ்லீம்களின் நிலையை வலுப்படுத்திய தென்றும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கூறப்படுகின்றது. இவ்விரு கருத்துக்களிலும் முதலிற் கூறப்பட்ட கருத்தே வலுப்பெற்றுச் சொல்லப்படுகின்றது.

## ஐரோப்பியர் காலம் :-

கீழைத் தேசத்து வர்த்தகத்தைக் கைப்பற்றுவதற்காகவும் கீழைத் தேசத்திலிருந்து திரவியங்களை அள்ளிச் செல்வதற்காகவும் ஐரோப்பியர் கீழைத் தேசங்களை நோக்கி வரத் தொடங்கினர். அவ்வாறாக முதலில் இலங்கைக்கு வந்த ஐரோப்பியர் போர்த்துக்கீசர் 16-ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இலங்கைக்கு வந்தபோது கோட்டை, கண்டி, யாழ்ப்பாணம் என மூன்று அரசுகளும், வேறும் வன்னிச் சிற்றரசுகளும் இருந்தன. இக்காலத்தில் கோட்டை அரசு மூன்று சகோதரர் இடையே மூன்று துண்டாக உடைந்தது. இவ்வுடைவைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு கோட்டையின் அரசியல் விடயத்தில் போர்த்துக்கீசர் ஆதிக்கம் பெறத் தொடங்கினர். 16-ம் நூற்றாண்டின் இறுதியில் கோட்டை அரசு போர்த்துக்கீசர் வசமாகியது.

கண்டி அரசு போர்த்துக்கீசரை வன்மையாக எதிர்த்து வந்தது. கண்டி அரசிற்கும், யாழ்ப்பாண அரசிற்கும் இடையே நல்லுறவுகள் நிலவின. தென்னிந்தியாவிலிருந்து யாழ்ப்பாண அரசுக்கூடாக கண்டி அரசிற்கு இராணுவ ரீதியான உதவிகள் கிடைப்பதாகக் கூறிக் கொண்டு யாழ்ப்பாண அரசின் கடல் படுதிரவியங்களையும், வர்த்தகத்தையும் கைப்பற்றுவதற்காகப் போர்த்துக்கீசர் யாழ்ப்பாண அரசின் மீது படையெடுப்புக்களை மேற்கொண்டனர். யாழ்ப்பாண அரசு போர்த்துக்கீசரையும், கத்தோலிக்க மதப்பரம்பலையும் வன்மையாக எதிர்த்தது. 1543-ம் ஆண்டு போர்த்துக்கீசப் படையெடுப்பு தோற்கடிக்கப்பட்டது. 1560-ம் ஆண்டு போர்த்துக்கீசர் யாழ்ப்பாண அரசின் கடல் வர்த்தக மையமாகவும், கடல்படு திரவியத் தளமாகவுமிருந்த மன்னாரைக் கைப்பற்றிக் கொண்டனர். யாழ்ப்பாண அரசு பொருளாதாரரீதியிற் பலவீனமடைய இது பெரிதும் காரணமாய் அமைந்தது.

இதைத் தொடர்ந்து யாழ்ப்பாண அரசில் இருந்த முதலியார் மட்டத்திலிருந்து போர்த்துக்கீசருக்குப் படிப்படியாக ஆதரவு கிடைக்கத் தொடங்கின. மேலும் ஆட்சி அதிகாரம் சம்பந்தமான பிரச்சினைகள் யாழ்ப்பாண அரசுக்குள் ஏற்பட்டன. இந்நிலையில் இறுதியாக 1619-ம் ஆண்டு யாழ்ப்பாண அரசு போர்த்துக்கீசராற் கைப்பற்றப்பட்டது. கண்டி அரசுதான் இறுதிவரை போர்த்துக்கீசரால் வெல்லப்பட முடியாத அரசாக இருந்தது. போர்த்துக்கீசர் ஆட்சியின் கீழ் கரையோர மாகாணங்களில் கத்தோலிக்கமதம் பரவி வந்தது. போர்த்துக்கீசர் வசமிருந்த இலங்கையின் கரையோர மாகாணங்கள் 17-ம்



நூற்றாண்டின் மத்தியில் டச்சுக்காரர் வசமாகின. டச்சு ஆதிக்கத்தின் கீழ் புரட்டஸ்த்தாந்து மதம் பரப்பப்பட்டது.

18-ம் நூற்றாண்டின் இறுதியுடன் இலங்கையிலிருந்த டச்சு ஆதிக்கம் முடிவடைந்து ஆங்கில ஆதிக்கம் உதயமாகியது. 1803-ம் ஆண்டு கண்டிமீது ஆங்கிலேயர் படை எடுத்துத் தோல்வி கண்டனர். பின்பு 1815-ம் ஆண்டு கண்டி இராச்சியமும் ஆங்கிலேயராற் கைப்பற்றப்பட்டதுடன் இலங்கை முழுவதும் ஆங்கிலேயர் ஆதிக்கத்திற்குட்பட்டது. இவ்வாறு இலங்கையில் நிலவி வந்த கோட்டை, யாழ்ப்பாணம், கண்டி ஆகிய மூன்று அரசுகளும் ஆங்கிலேயரின் ஆதிக்கத்திற்குட்பட்டன. இவ்வாறு இலங்கை முழுவதும் ஆங்கில ஆதிக்கத்திற்குட்பட்டிருந்த போதிலும் கொழும்பு, கண்டி, யாழ்ப்பாணம் என்பன தனித் தனி நிர்வாகப் பிரிவுகளாகவே ஒரு பிரதேசத்துடன் இன்னொன்று இணைக்கப்படாதிருந்தன. ஆனால் கோல்புறூக் — கமறன் அரசியற் திட்ட அறிக்கையின் பிரகாரம் நிர்வாக வசதிக்காக 1833-ம் ஆண்டு இலங்கைதீவு முழுவதும் பிரதேச ரீதியாக ஒருங்கிணைக்கப்பட்டது. போர்த்துக்கீசர், டச்சுக்காரர் ஆகிய ஐரோப்பியர் இலங்கையின் கரையோர மாகாணங்களைத் தமது ஆதிக்கத்தின் கீழ் வைத்திருந்த போதிலும் தமிழ்ப் பிரதேசத்தையும், சிங்களப் பிரதேசத்தையும் ஒன்றாக இணைக்கவில்லை. ஆங்கிலேயரும் ஆரம்பத்தில் அவ்வாறு செய்த போதிலும் 1833-ம் ஆண்டு இலங்கை முழுவதையும் ஒருங்கிணைத்தனர்.

இதன்மூலம் ஒற்றையாட்சி நிர்வாக அமைப்பினுள் இனவேறுபாடுகள் பற்றிய பிரச்சினை எழத் தொடங்கியது. வேறுபட்ட மொழி, மதப் பண்பாட்டுக் கூறுகளைக் கொண்ட மக்களை ஒருங்கிணைந்த ஆட்சியின் கீழ் கொண்டு வந்த பொழுது விஞ்ஞான பூர்வமாக ஒவ்வொருவருக்குமுரிய தனித்துவங்கள், அந்தஸ்துக்கள் என்பன அங்கீகரிக்கப்பட்டு ஒருங்கிணைப்பு மேற்கொள்ளப்படவில்லை. மாறாகப் பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் தேவைக்கேற்ப அவர்களுக்கு இலாபகரமான முறையில் இலங்கையில் நிலவிய பல்வேறுபட்ட பண்பாட்டுக் கூறுகளும் பலாத்காரமான முறையில் ஒருங்கிணைக்கப்பட்டன. இனங்களிடையே மோதலேற்படுவது ஏகாதிபத்திய எதிர்ப்பைக் குறைக்க உதவும். தேவைகேற்ப ஏகாதிபத்தியம் இன முரண்பாடுகளுக்குத் தூபமிடுவது இயல்பு. எனவே ஒற்றையாட்சி நிர்வாக அமைப்பை இலங்கையில் உருவாக்கிய பொழுது அடிப்படையில் இனங்களுக்கிடையே ஐக்கியத்தை உருவாக்கக் கூடிய விதத்தில் அத்திவாரமிடப்படவில்லை.

மலையக மக்களின் வரலாற்றுத் தோற்றத்தைச் சற்று நோக்குவோம். 19-ம் நூற்றாண்டின் காற்பகுதியிலிருந்து பெருந்தோட்டப் பயிர்ச் செய்கைக்கான கூலி வேலையின் பொருட்டுத் தென்னிந்தியாவிலிருந்து தமிழர் இலங்கையின் மலையகத்திற்குக் கொண்டு வரப்பட்ட

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



னர். இதன்மூலம் இலங்கை வரலாற்றில் இந்தியத் தமிழர் என்றோ அல்லது மலையகத் தமிழர் என்றோ கூறப்படும் ஓர் சந்ததி உருவாகியது. மலையக மக்கள் இலங்கைக்குக் கொண்டு வரப்பட்ட முறையும், அவர்களது வாழ்வும் அடிமை வாழ்விற்கு ஒப்பானது. அமெரிக்க நிலங்களில் உடலுழைப்பிலீடுபடுத்துவதற்காக ஆபிரிக்காவிலுள்ள கறுப்பின மக்களை எவ்வாறு வெள்ளையர் வேட்டையாடி அமெரிக்காவிற்குக் கொண்டு சென்று அங்கு அடிமைகளாக்கினார்களோ அதனை ஒத்தவகையில் மலையகமக்கள் இங்கு அடிமைகளாகக் கொண்டு வரப்பட்டார்கள். ஆசை வார்த்தைகளைக் கூறி, பொய் வாக்குறுதிகளை அளித்து ஏமாற்றித் தென்னிந்தியாவிலிருந்து கப்பல்களிலேற்றி மன்னார் துறைமுகத்தில் இறக்கி அங்கிருந்து கால்நடையாக மலையகத்திற்கு அழைத்து வரப்பட்டார்கள். காட்டுப்பாதையில் பசி, நோய், மிருகங்கள் என்பவற்றிற்கெல்லாம் இந்த அப்பாவி மக்கள் பலியானார்கள். இறுதியாக மலையகத்தை அடைந்து அங்கு இருந்த பெருங்காடுகளை அழித்து பெருந்தோட்டப் பயிர்ச் செய்கைக்குரிய நிலமாக்கி அப்பெருந்தோட்டங்களில் மாடு போல இரவு பகலாக உழைத்து உயிர் வாழ மட்டும் ஊதியம் பெற்றார்கள். இலங்கையின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக இருந்த இம்மக்கள் உழைத்துழைத்து எழும்புக்கூடாய்ப் போனார்கள். இலங்கையிலுள்ள சகல மக்கள் கூட்டங்களிலும் மிக அதிகமாக ஒடுக்குமுறைக்கும், இன்னல்களுக்குமுள்ளாகிய மலையக மக்களின் வரலாறு இவ்வாறு தோற்றம் பெற்றது. இலங்கையின் இனப்பிரச்சினை வரலாற்றில் மலையக மக்களின் வருகை மேலும் ஒரு புதிய அத்தியாயமாய்க் கருக்கொண்டது.

ஒற்றையாட்சி அரசியல் நிர்வாக அமைப்பினுள் அரசியல் வர்த்தகப் பொருளாதாரத் தலைநகரமாய் கொழும்பு அமைந்தது. கொழும்பிலுள்ள சட்ட நிரூபண சபையில் தமிழ் சிங்களப் பிரதிநிதிகள் அங்கம் வகிக்கத் தொடங்கினர். புகையிரத வீதி, மற்றும் போக்குவரத்து வீதிகள் தொலை தொடர்புச் சாதனங்கள் என்பனவற்றின் மூலமாகத் தமிழ்ப் பிரதேசமும், பொருளாதார வாழ்வும் கொழும்புடனும், இலங்கையின் ஏனைய பாகங்களுடனும் இணைக்கப்பட்டது. கொழும்பைச் சார்ந்த வர்த்தகம், அப்புக்காத்துத் தொழில், வடக்கு, கிழக்கு, மாகாணங்களுக்கு வெளியிலான உத்தியோகம், அதைச் சார்ந்த கல்வி, பெருந்தோட்டப் பயிர்செய்கை சார்ந்த வருவாய் ஆகியவற்றிற்கு முன்னுரிமை கொடுத்து அவற்றினைப் பிரிதிநிதித்துவப் படுத்தத் தமிழ்த் தலைமை முற்பட்டது.

ஒப்பந்தவேலைகள், வாடகை, தென்னை, கறுவாப் பயிர்ச்செய்கை, போக்குவரத்து, சுரங்கத் தொழில், சாராயக் குத்தகை, சிறுவர்த்தகம், போன்றவற்றில் முதலீடுகள் செய்வதைச் சார்ந்து ஓர் புதிய முதலீட்டு வர்க்கம் இலங்கையின் நவீன வரலாற்றில் தோற்றம் பெற்



றது. மேலும் ஆங்கில ஆதிக்கத்தில் நிர்வாக உத்தியோகங்களையும், கீழ்நிலை உத்தியோகங்களையும் பெறுகின்ற கல்வியை அடிப்படையாகக் கொண்ட ஓர் மத்திய தர வர்க்கம் (மார்க்ஸ் கூறிய மத்திய தர வர்க்கம் என்ற அர்த்தத்திலல்ல) தோற்றம் பெற்றது. முதலீட்டுத்துறையில் சிங்களவரை விடத் தமிழருக்கு வாய்ப்புக்கள் குறைவாக இருந்தமையால் தமிழர் கல்விசார்ந்த உத்தியோகங்களில் அதிக அக்கறை செலுத்தினர் என்பதும் கவனிக்கத்தக்கது. பொதுவாகக் குறிப்பிடுவதாயின் ஏகாதிபத்தியச் சமூகப் பொருளாதாரத் தேவையை அடிப்படையாகக் கொண்டு இலங்கை அரசியற், சமூக பொருளாதார ரீதியில் நவீன மாற்றங்களுக்கு உட்பட்டது.

முதலீட்டு வர்க்கமும், மேற்தர, மத்தியதரவர்க்கமும் இணைந்து ஏகாதிபத்திய ஆட்சியின் கீழ் இலங்கையில் அரசியற் பிரதிநிதித்துவம் பெறத் தொடங்கினர். இவர்கள் பிரித்தானிய ஏகாதிபத்திய ஆட்சியின் கீழ் (ஏகாதிபத்திய ஆதிக்கத்தை ஏற்று) தமது நலனுக்கேற்ப அரசியற் சீர்திருத்தங்களையே கோரி நின்றனர். ஒற்றையாட்சி நிர்வாக அமைப்பின் கீழ் ஐக்கிய இலங்கை என்ற கொள்கையைக் கொண்டவர்களாக இவ்வர்க்கத்தைச் சார்ந்த தமிழ், சிங்கள அரசியல் வாதிகள் காணப்பட்டனர்.

ஆங்கில ஆட்சியின் கீழ், சுதேசமொழிகள், பண்பாடுகள் என்பன புறக்கணிக்கப்பட்டு ஆங்கிலம் அரசகரும மொழியாகவும், கல்வி மொழியாகவும் இருந்தது. 1815-ம் ஆண்டு கண்டி கைப்பற்றப்படுகையில் பௌத்த மதத்தை ஆங்கில அரசு பேணிப் பாதுகாக்கும் என்ற உடன்படிக்கையுடன் கண்டி அரசு பிரித்தானியர் ஆதிக்கத்திற்குட்பட்டது. ஆனால் 1817 — 18-ம் ஆண்டு கண்டிக் கலகத்தை அடுத்து இவ்வுடன்படிக்கையை ஆங்கிலேயர் மீறினர். கிறீஸ்துவ மதத்திற்கும், ஆங்கிலக் கல்விக்குமே ஆங்கிலேயர் ஊக்கமளித்தனர். இந்நிலையில் கண்டிச் சிங்களவர் ஆங்கில ஆதிக்கத்தின் மீது அதிருப்தியுற்றனர். கண்டிச் சிங்களவர் அரசியல் ரீதியாகப் புறக்கணிக்கப்பட்டனர். கண்டிச் சிங்களவர் கரையோரச் சிங்களவரிலிருந்து தம்மை வேறுபட்ட ஓர் சமூகமாகவே கருதினர். கரையோரச் சிங்களவர் போர்த்துக்கீசர், டச்சுக்காரர் ஆதிக்கத்திற்கு உட்பட்டிருந்த வேளை கண்டியர் அவ்வாறு உட்படாது சுதந்திரமாக இருந்தனர். போர்த்துக்கீசர், டச்சுக்காரர் ஆகியோரின் ஆதிக்கத்தின் கீழ் கண்டிச் சிங்களவர், கரையோரச் சிங்களவர் என்ற வேறுபாடுகள் அதிகரித்தன. இந்தவகையில் கண்டிச் சிங்களவர் தமது தனித்துவம் பற்றி அதிகம் அக்கறை செலுத்தினர். இலங்கையிற் சமஷ்டி ஆட்சிபற்றிய கருத்தை முதலில் முன்வைத்தவர்கள் கண்டிச்சிங்களவர் என்பதை இங்கு நாம் கருத்தில் எடுத்துக் கொள்ளவேண்டும். ஆரம்பத்தில் கண்டிச் சிங்களவர், கரையோரச் சிங்களவரிடையேயான வேறுபாட்டை ஒட்டமுடி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



யாத வேறுபர்டுகள் என்று எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா குறிப்பிடுமளவிற்கு வேறுபாடுகள் இருந்தன. இந்தவகையில் ஆங்கில ஆதிக்கத்தின்கீழ் கண்டியர் பௌத்த – சிங்களத் தேசியவாதம் தோற்றம் பெற்றது.

19-ம் நூற்றாண்டின் பிற்பகுதியையும், 20-ம் நூற்றாண்டின் முற்பகுதியையும் பொதுவாகப் பார்க்கின்றபோது ஆங்கில ஆதிக்கத்தின் கீழ்பொதுவாகக் கண்டி – கரையோரச் சிங்கள – பௌத்த தலைவர்கள் அரசியற் பிரதிநிதித்துவம் பெறவில்லை. குறிப்பாகக் கிறீஸ்தவத்திற்கு மதம் மாறியவர்களும், ஆங்கில ஆதிக்கத்திற்கு இசைவானவர்களுமே அரசியலிற் பிரதிநிதித்துவம் பெற்றிருந்தனர். இந்தவகையிற் சிங்கள-பௌத்த புத்துணர்வு சிங்கள – பௌத்த மேற்குழாத்தினர் மத்தியில் உருவாகியது. 1880-ம் ஆண்டளவில் தெற்கில் பௌத்த மறுமலர்ச்சி தோற்றம் பெற்றது. தல்கொட், குணானந்த தேரோ, அநகாரிக தர்மபால, பியதாச சிறிசேன போன்றோர் இப் பௌத்த மறுமலர்ச்சிக்காக உழைத்தனர். சிங்கள – பௌத்த மறுமலர்ச்சிக்காக உழைத்த அனைவருள்ளும் அநகாரிக தர்மபாலா முக்கியமானவராவார். சிங்கள – பௌத்த மக்களின் நியாயமான பிரச்சினைகளுக்கு இவர் நவீன வரலாற்றில் இனவாத அடிப்படையில் அத்திவாரமிட்டு வழிநடத்தினார்.

அநகாரிக தர்மபாலா சிங்கள – பௌத்த தேசிய வாதத்தை வளர்ப்பதற்குப் பெரும் பாடுபட்டார். சிங்கள – பௌத்த விழிப்புணர்வை உருவாக்குவதற்காக இவர் பலவழிகளிலும் உழைத்தார். இவர் ஆங்கில ஆதிக்கத்தை எதிர்த்தார். கிறீஸ்த்தவமதப் பரம்பலை எதிர்த்தார். கண்டி – கரையோரச் சிங்களவர் என்ற வேறுபாட்டைக் கடந்து சிங்கள–பௌத்தம் என்ற கருத்தை முன்வைத்தார். இது ஒரு சிங்கள – பௌத்த நாடு என்றும், இந்நாடு முழுவதும் சிங்கள – பௌத்தர்களுக்கே உரியதென்றும் கூறினார். சிங்கள – பௌத்தர்தான் இம் ''மண்ணின் மைந்தர்கள்'' என்ற கருத்தை ஊன்றினார். சிங்கள – பௌத்த முதலாளித்துவத்தை ஊக்குவிக்க முயன்றார். முஸ்லீம் எதிர்ப்பு, இந்திய எதிர்ப்பு, தமிழர் எதிர்ப்பு, போன்ற கருத்துக்களை முன்வைத்தார். குறிப்பாக முஸ்லீம், இந்தியர் வர்த்தகத்திற்கெதிரான கருத்துக்களை முன்வைத்தார். முஸ்லீம்களைத் தென்னிந்தியாவிலிருந்து வந்த அந்நியர்கள் எனக் கண்டித்தார். கடந்தகாலத் தென்னிந்தியப் படை எடுப்புக்களையெல்லாம் சுட்டிக் காட்டினார். மேற்கத்தேச மன்னர்களைப் பற்றிப் படிப்பதை விடுத்துச் சிங்கள மன்னர்களைப் பற்றிப் படிக்குமாறு வற்புறுத்தினார். சிங்கள – பௌத்த மக்கள் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகச் சுதந்திரத்திற்காகத் தமது இரத்தத்தையே ஆறாக ஓடவிட்டவர்கள் என்று குறிப்பிட்டுப் பெருமைப்படுத்தி மற்றைய மக்களை அந்நியர்கள் என்றும், படையெடுப்பாளர் என்றும் கூறினார்.



இவர் சிங்கள மக்களை விழிப்படைய வைப்பதற்குக் கிராம மட்டத்திற்குச் சென்றார்; பத்திரிகை நடத்தினார்; சஞ்சிகை நடத்தினார். இவரது நண்பன் பியதாசசிறிசேன பத்திரிகை, சஞ்சிகை, மற்றும் இலக்கியம் என்பவற்றிற்கூடாக சிங்கள – பௌத்தத்தை வளர்த்தெடுக்க உழைத்தவர். அநகாரிக தர்மபாலா சிங்கள – பௌத்தத்தை வளர்ப்பதற்காக வெளிநாடுகளுக்கு விஜயங்களை மேற்கொண்டார். இவரின் வெளிநாட்டு விஜயங்களைக் கண்டு அஞ்சிய ஆங்கில ஆதிக்கம் இவர் செல்லும் நாடுகளிலெல்லாம் உளவுப்படை மூலம் இவரது நடவடிக்கைகளை அவதானித்தது. இவர் பௌத்த நிறுவனத்தை நவீன நிலைமைக்கேற்ப புதுப்பித்துச் சீர்திருத்தினார். பௌத்த நிறுவனத்திற்கு அரசியல் உணர்வை ஏற்படுத்தினார். இவர் போன்றோர் 19-ம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும், 20-ம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் இட்ட அத்திவாரம்தான் இலங்கையின் பிற்கால அரசியல் வரலாற்றுப் போக்கை நிர்ணயிக்கும் தன்மையுடையதாய் அமைந்தது.

இலங்கையின் நவீன வரலாற்றில் முதற்தடவையாக மதக்கலவரம் 1883-ம் ஆண்டு நிகழ்ந்தது. பௌத்த மதக்குரு குணானந்த தேரோ தலைமையில் கத்தோலிக்க எதிர்ப்புக் கலகம் கொட்டாஞ்சேனையில் நிகழ்ந்தது. இதில் ஒருவர் இறந்ததுடன் பொலிசார் உட்படப் பலர் காயமுற்றனர். 20-ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் அநகாரிக தர்மபாலா கிறீஸ்தவர்களைப்பற்றிக் குறிப்பிடுகையில் கிறீஸ்தவர்கள் காட்டுமிராண்டிகள் என்றும், அவர்க்ள் சமூகத்தை நாசம் செய்கிறார்கள் என்றும் கண்டித்தார். மேலும் 1915-ம் ஆண்டு முஸ்லீம்களுக்கெதிரான கலகம் நிகழ்ந்தது. இக்காலத்தில் அநகாரிக தர்மபால முஸ்லீம்களைப்பற்றிக் குறிப்பிடுகையில் முஸ்லீம்கள் அந்நியர்கள் என்றும் யூதர்களைப் போல நாளுக்கு நாள் இந்த நாட்டை அரித்து அப்பாவிச் சிங்கள மக்களை ஏமாற்றித் தாம் வளமாக வாழ்கிறார்கள் என்றும் அதேவேளை இம் ''மண்ணின் மைந்தர்கள்'' ஆகிய சிங்கள பௌத்த மக்கள் தாழ்நிலை அடைந்து செல்கிறார்கள் என்றும் குறிப்பிட்டார். சிங்கள – பௌத்த தேசியவாதம் அநகாரிக தர்மபாலாவிற்குச் சற்றுமுன் வேறு பௌத்தர்களால் முன்வைக்கப்பட்ட போதிலும் அநகாரிக தர்மபாலாதான் அதற்குச் சரியான முறையில் அத்திவாரமிட்டு வடிவம் கொடுத்தார்.

அநகாரிக தர்மபாலாவையும் அவரை ஒத்த சிங்கள-பௌத்த தேசியவாதிகள் பற்றியும் நாம் சரியான முறையில் மதிப்பீடு செய்ய வேண்டும். இதில் இரண்டு அம்சங்களை நாம் அவதானிக்கலாம். ஒன்று அநகாரிக தர்மபாலா ஏகாதிபத்தியத்தை எதிர்த்தார். சிங்கள-பௌத்தர் மத்தியில் விழிப்புணர்வையும், ஐக்கியத்தையும் ஏற்படுத்த உழைத்தார்; தமது சுயகலாச்சாரத்தைப் பெருமைக்குரியதென்று முன்னிறுத்தி ஆங்கில மோகத்தைப் பின்தள்ள உழைத்தார். குறிப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பிட்ட இம்மூன்று அம்சங்களையும் பொறுத்து வரலாற்றில் முற்போக்கான பாத்திரத்தை ஆற்றியிருக்கிறார். மற்றையது, இனவாதம்; பிறசமய சமூகக்குரோதம் என்ற அடிப்படையின் மீதுதான் முதற் குறிப்பிட்ட அம்சங்களைக் கட்டி வளர்த்தார். சிங்கள-பௌத்த ஓரினக் கொள்கையை முன்வைத்தார். இந்த வகையிற் பிற்காலத்தில் உருவெடுத்துள்ள இனப்பிரச்சினைகளுக்கும், நாட்டின் சுபீட்சமின்மைக்கும் அடிப்படையில் வழிவகுத்தார்.

இவ்வாறு சிங்கள,பௌத்த இனவாதம் தெற்கிற் தோற்றம் பெற்று வளர்ந்து வந்தபொழுது தமிழர் பக்கம் நிலைமை எவ்வாறு இருந்ததென்பதை நோக்க வேண்டும். கொழும்பைச் சார்ந்த சிறு வர்த்தகம், வடக்கு கிழக்குக்கு வெளியேயான உத்தியோகம், மற்றும் வேலைவாய்ப்புக்கள் என்பவற்றை நோக்கித் தமிழ் மக்களின் அரசியற்-பொருளாதார வாழ்வு திரும்பியது. ஆங்கிலேயருக்கு விசுவாசமுள்ள சேவகராய் தமிழர் பயபக்தியுடன் உத்தியோகத்திலீடுபட்டனர். ஆங்கிலேயரால் உள்நாட்டிலும், நாட்டுக்கு வெளியிலும் (மலேசியா) தமிழர் சிறந்த ஊழியர் எனப் பாராட்டப்பட்டனர். வர்த்தகர், உத்தியோகத்தர், வழக்குரைஞர் என்போரின் நலன்களே அரசியலிற் பெரிதும் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டது. இந்நலன்கள் வடக்கு கிழக்குக்கு வெளியே பெரிதும் இருந்தமையால் பிரதேச உணர்வு தமிழரின் அரசியலில் இல்லாதிருந்தது: சமூக, கலாச்சார விழிப்புணர்வுகளை ஏற்படுத்துவதில் அக்கறை காட்டப்படவில்லை. ஆனால் 1920-ம் ஆண்டுகளின் நடுப்பகுதிகளில் வடக்கில் முற்போக்கான தீவிர அரசியல் நடவடிக்கைகள் உருவாகத் தொடங்கின. இவ்வாறு உருவாகிய இச்சக்தி 1930-ம் ஆண்டுகளின் நடுப்பகுதியில் தோற்கடிக்கப்பட்டது. இதனைப் பின்பு நோக்குவாம்.

20-ம் நூற்றாண்டின் முற்பகுதியில் சேர். பொன். இராமநாதன், சேர். பொன். அருணாசலம் போன்றோர் தமிழ்-மக்கள் மத்தியிற் பிரபல்யம் பெற்ற தலைவர்களாக இருந்தனர். இவர்கள் தேசம் அடங்கலான ரீதியில் அரசியலில் ஈடுபட்டுப் பிரபல்யம் பெற்றனர். இவர்கள் முதலீட்டு வர்க்கத்தையும், மத்தியதர வர்க்கத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தும் சீர்திருத்தம் கோரும் குழாத்தினைச் சேர்ந்தவராவர். இலங்கை முழுவதற்குமான கல்விகற்ற பிரதிநிதிக்கான தேர்தலில் சேர். பொன். இராமநாதன் ஓர் சிங்களப் பிரதிநிதியுடன் போட்டியிட்டு வெற்றி பெற்றார். சிங்களவர் மத்தில் கரையோரச் சிங்களவர், கண்டிச் சிங்களவர் என்ற வேறுபாடும், சாதிப்பிரச்சினையும் தொழிற்பட்டமையால் சேர். பொன். இராமநாதன் ஓர்சிங்களப் பிரதிநிதியை எதிர்த்து வெற்றி பெறுவது சாத்தியமாகியது.

தமிழரையும், சிங்களவரையும் உள்ளடக்கிய ஓர் மிதவாதஸ்தாபனமாக இலங்கைத் தேசிய காங்கிரஸ் 1919-ம் ஆண்டு உதயமாகியது.



இதனை ஆரம்பித்த சேர். பொன். அருணாசலம் இதன் முதலாவது தலைவரானார். இத்தாபனம் குணம்சத்தில் ஓர் பூர்ஷ்வாத் தாபனமாகும். ''சுதந்திரம்'', ''சமத்துவம்'', ''சமூகச் சீர்திருத்தம்'' என்பன இத்தாபனத்தால் முன்வைக்கப்பட்ட கொள்கையாகும், அடிப்படையில் இவ்வியக்கம் பிரித்தானிய ஆதிக்கத்திடம் அரசியற் சீர்திருத்தங்களைக் கோரும் இயக்கமாகவே செயற்பட்டது. அப்போதிருந்த சட்ட நிரூபண சபைக்கு உத்தியோகப் பற்றற்ற பிரதிநிதிகளை அதிகரிக்குமாறு கோருவதும், நிர்வாகத்திற் சுதேசிகளுக்கு அதிக பங்கு தருமாறு கோருவதுமே இவர்கள் கோரும் பிரதான அரசியற் சீர்திருத்தமாகும். இந்தவகையில் சட்ட நிரூபண சபைக்கான பிரதிநிதிகளை அதிகரிக்கக் கோருகையில் அதைத் தமிழ், சிங்களப் பிரதிநிதிகளிடையே பங்கீடு செய்வதான பிரச்சினை எழுவதுண்டு, இந்த வகையில் 1920-ம் ஆண்டு ஆள்பதி மனிங் வழங்கவிருந்த சீர்திருத்தத்தின் பொருட்டு சட்ட நிரூபண சபையிற் தமிழருக்கான பிரதிநிதித்துவத்தை அதிகரிக்க வேண்டுமென்றும், குறிப்பாக கொழும்பில் தமிழர் பிரதிநிதிக்கென ஓர் தொகுதி வரையறுக்கப்பட வேண்டுமென்று சேர். பொன். அருணாசலம் கோரினார். இதனைச் சிங்களத் தலைவர்கள் ஏற்க மறுத்தனர். இதனால் விரக்தியுற்ற சேர். பொன், அருணாசலம் இலங்கைத் தேசிய காங்கிரசிலிருந்து பிரிந்து 1921-ம் ஆண்டு தமிழர் மகாஜன சபை எனும் ஓர் தாபனத்தை ஆரம்பித்தார். இவ்வாறு இலங்கையர் என்ற ஓர் பொதுத் தாபனத்தில் சகல இன, மத மக்களும் இணைந்து ஐக்கியமாகச் செயற்படவென்று தொடங்கிய முதலாவது தாபனம் தனது இரண்டு வயதுப் பிராயத்திலேயே தோல்வி கண்டுவிட்டது. இந்தவகையிற் தமிழ், சிங்கள மேற்குழாத்தின் மத்தியில் இனரீதியான பிளவு முதலில் வெளிப்பட்டது. மேலும் பிற்காலத்தில் தொடர்ந்து அரசியலிற் சீர்திருத்தங்கள் செய்யப்படும்போது இன முரண்பாடுகள் மேலும், மேலும் ஆழமானதாக வெளிப்பட்டுச் சென்றதையே அவதானிக்க முடிகின்றது.

இச் சிங்கள மேற்குழாத்திற்கும், தமிழ் மேற்குழாத்திற்குமிடையே இன முரண்பாடு முதற் தடவையாக பிளவு என்ற ரீதியிற் வெளிப்பாடடைந்தபோது இச்சிங்கள மேற்குழாத்தை விட சிங்கள மக்கள் மத்தியில் அதிக வலுவுள்ள சக்தியாக அநகாரிக தர்மபாலா போன்றோரால் அத்திவாரமிட்டு உருவாக்கப்பட்ட சக்தியே எதிர்கால அரசியலை நிர்ணயிக்கக்கூடிய தொன்றாய் உள்ளூர வளர்ந்துகொண்டு வந்தது. இந்தச் சிங்கள மேற்குழாத்தை விட மேலும் வலுவான இனவாத சக்தியொன்று உள்ளூர வளர்ந்துகொண்டிருந்ததென்பதை அக்காலத்திற் தமிழர் பெயராலான தலைவர்கள் யாரும் அடையாளம் கண்டுகொள்ளவில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



1920-ம் ஆண்டின் மத்தியில் வடக்கில் யாழ்ப்பாண மாணவர் காங்கிரஸ் என்னும் தாபனம் தோற்றம் பெற்றது. முற்போக்கான கொள்கையுடன் இத்தாபனம் உதயமாகியது. இத்தாபனம் 1920-ம் ஆண்டின் பிற்பகுதியில் யாழ்ப்பாணம் வாலிபர் காங்கிரஸ் எனப் பெயர் மாற்றம் செய்துகொண்டது. இது ஏகாதிபத்திய எதிர்ப்பு, ஆங்கிலேயரிடமிருந்து பூரண சுதந்திரம், இனவாத எதிர்ப்பு, தமிழ் சிங்கள ஐக்கியம், சுயமொழிக் கொள்கை, சாதிப்பாகுபாட்டெதிர்ப்பு போன்றவற்றைத் தனது கொள்கையாகக் கொண்டிருந்தது. காந்தியக் கொள்கையால் அதிகம் கவரப்பட்ட இத்தாபனத்திடம் சோஷலிசக் கொள்கையும் குடிகொண்டிருந்தது. டொனமூர் அரசியற் திட்டம் இலங்கைக்குப் பொறுப்பாட்சியை வழங்கத் தவறிவிட்டதென்றும் எனவே டொனமூர் அரசியற் திட்டத்தை நிராகரிப்பதென்ற அர்த்தத்தில் டொனமூர் அரசியற் திட்டத்தின் கீழான முதலாவது பொதுத் தேர்தலைப் பகிஷ்கரிப்பதென்றும் யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ் தீர்மானித்தது. சிங்களத் தலைவர்கள் தாமும் பகிஷ்கரிப்பில் ஈடுபடுவதாக ஆரம்பத்தில் ஒப்புக்கொண்டபோதிலும் 1931-ம் ஆண்டு நிகழ்ந்த முதலாவது தேர்தலில் போட்டியிட்டனர். யாழ்ப்பாணத்தில் சில தலைவர்கள் போட்டியிட நியமனப் பத்திரங்களைத் தாக்கல் செய்யக் கச்சேரிக்கும் புறப்பட்டபோதிலும் வாலிபர் காங்கிரஸ் உறுப்பினர்கள் அவர்களைத் தடுத்து நிறுத்தினர். இதன் மூலம் யாழ்ப்பாணத்திலிருந்த நான்கு தொகுதிகளும் பகிஷ்கரிக்கப்பட்டன. இலங்கை முழுவதற்குமான மிகுதி 46 தொகுதிகளுக்கும் தேர்தல் நடைபெற்றது, இதுவே இலங்கை வரலாற்றில் ஏற்பட்ட முதலாவது தேர்தல் பகிஷ்கரிப்பாகும். இத்தேர்தற் பகிஷ்கரிப்பை பல சிங்களத் தலைவர்களும் பாராட்டியிருந்தார்கள். வடக்கு முன்னுதாரணமாக அரசியலிற்குத் தலைமை தாங்குகிறது என்று பாராட்டி பிலிப் குணவர்த்தனு போன்ற இடதுசாரித் தலைவர்கள் யாழ்ப்பாண வாலிப காங்கிரஸ் செயற்குழுவிற்குப் பாராட்டுச் செய்திகள் அனுப்பி வைத்தார்கள்.

இப்பகிஷ்கரிப்பு சரியா — பிழையா ? வெற்றியா — தோல்வியா ? என்பன விமர்சனத்திற்கு உரியன என்றபோதிலும் உண்மையில் இப் பகிஷ்கரிப்பு இது நிகழ்ந்த கால கட்டத்தில் மிகவும் தீவிரமானதும் மிகவும் முற்போக்கான எண்ணம் கொண்டதுமான நடவடிக்கை என்பதில் ஐயமில்லை. சர்வஜன வாக்குரிமையை விரும்பாத தமிழ்த் தலைவர்களின் வகுப்புவாத ரீதியான ஓர் பகிஷ்கரிப்பென்று பின்பு பல சிங்கள இனவாதத் தலைவர்கள் வாய் கூசாமற் கூறினர், ஜி. ஜி. பொன்னம்பலம் இக்காலகட்டத்திற்தான் அரசியலிற் குதித்தவர். இவர் பகிஷ்கரிப்புப் பிழையானதெனக் கண்டித்தார். யாழ்ப்பாணத்தில் ஒரு தொகுதியிற் போட்டியிட முனைந்தார் (பருத்தித்துறை தொகுதி). பகிஷ்கரிப்பு வெற்றியளிக்கும் நிலைகண்டு மன்னார்த் தொகுதியிற் போட்டியிட்டு ஜி. ஜி. பொன்னம்பலம் தோல்வியுற்றார். இவ்வாறு மன்னார்த் தொகுதியிற் தோல்வி கண்ட பொன்னம்பலம் யாழ்ப்பாணத்தில் நான்கு தொகுதிகளிலும் தேர்தலை நடாத்துமாறு ஆள்பதியை வேண்டினார். இலங்கையின் ஏனைய பகுதிகளிற் தேர்தல் நடைபெற்றிருந்த பட்சத்தில் பகிஷ்கரிப்பாளரிடம் போராட்டத்திற்கான வேறு மாற்றுவழிகள் இருக்கவில்லை. எனவே பகிஷ்கரிப்பாளர் பலவீனப்பட்டனர். இந்நிலையில் 1932-ம் ஆண்டு பகிஷ்கரிப்பு தோல்வியில் முடிந்து நான்கு தொகுதிகளுக்கான இடைத் தேர்தல் நடைபெற்றது. ஜி. ஜி. பொன்னம்பலத்தின் ஆசை நிறைவேறியது. அவர் பருத்தித்துறைத் தொகுதியில் வெற்றியீட்டினார். சிங்கள மக்கள் மத்தியில் எழுந்த வகுப்புவாதிகளும் மற்றும் ஜி. ஜி. பொன்னம்பலம் போன்றோரும் இணைந்து யாழ்ப்பாண வாலிப காங்கிரசைத் தோற்கடித்தார்கள். இதனைத் தொடர்ந்து தமிழ் மக்களுக்கான தலைமையைப் பொன்னம்பலம் கைப்பற்றிக்கொண்டார். இதிலிருந்து பொன்னம்பலத்தின் தலைமைக்காலம் ஆரம்பமாகியது.



1929 — 31-ம் ஆண்டுகளிலான உலகப் பொருளாதாரம் மந்த சூழ்நிலையில் வேலையில்லாப் பிரச்சினை தீவிரமடைய இந்தியத் தோட்டத் தொழிலாளர் எதிர்ப்புவாதம் இலகுவாகத் தோற்றுவிக்கப்பட்டது. இப்பிரச்சினை வேறும் பல பரிமாணங்களைப் பெற்று மேலும் வளர்ந்து சென்றது. உலகப் பொருளாதார மந்தத்தின் ஆரம்பத்துடன் ஏ. ஈ. குணசிங்கா தொழிற்சங்க வாதத்திலிருந்த தீவிரக் கொள்கையைக் கைவிட்டார். 1933-ம் ஆண்டு இவர் வெள்ளவத்தை நெசவாலைத் தொழிலாளர் வேலைநிறுத்தப் பிரச்சினையின்போது மலையாளி எதிர்ப்பைச் சிங்களத் தொழிலாளர் மத்தியிற் தூண்டினார். இவ்வாறு ஒரு ஆலையில் வேலை செய்த சிங்கள, மலையாளத் தொழிலாளரிடையே தொழிலாளர் என்ற ஒற்றுமை மறக்கப்பட்டு இனம் என்ற கருத்து முன் வைக்கப்பட்டது, இந்த வகையில் இனரீதியான சிந்தனை மிக இலகுவாக எல்லா மட்டத்திலும் தோற்றம் பெறுவதை இக்கால கட்டத்தில் அவதானிக்கக்கூடியதாய் உள்ளது.

இக்காலகட்டத்தில் தெற்கில் இன்னொரு சக்தி அரசியலிற் தோற்றம் பெற்றது. அச்சக்தியே இடதுசாரிகளாவர். லண்டனில் பல்கலைக் கழகக் கல்வி பயின்ற கலாநிதி என். எம். பெரேரா, கலாநிதி கொல்வின் ஆர். டி. சில்வா, டாக்டர் எஸ். ஏ. விக்கிரமசிங்கா மற்றும் லெஸ்லி குணவர்த்தனு, பிலிப் குணவர்த்தனு போன்றோர் மாக்ஸிஸ சிந்தனைகளாற் கவரப்பட்டு இலங்கையில் அரசியல் நடவடிக்கையில் ஈடுபட்டார்கள். இவர்களைத் தொழிற்சங்கவாதத் தன்மை கொண்ட லண்டன் மாக்ஸிஸ்டுகள் என்று கூறுவதே

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பொருத்தமானது. இவர்கள் புரட்சிகர மாக்ஸிஸ்டுகளுக்குரிய தன்மையைக் கெகண்டிருக்காவிட்டாலும் முற்போக்கான எண்ணங்களைக் கொண்டிருந்தார்கள். தீவிர தேசியவாதிகளும் இவர்களும் இணைந்து 1935-ம் ஆண்டு லங்கா சமசமாஜக் கட்சியைத் தாபித்தார்கள். ஏகாதிபத்தியத்தை எதிர்ப்பதற்கு மாக்ஸிஸ்ட் அல்லாத தீவிர தேசியவாதிகளுடன் கூட்டுச் சேரலாம் என்ற அடிப்படையில் லங்கா சமசமாஜிக் கட்சியில் தீவிர தேசியவாதிகளையும் இணைத்துக் கொண்டார்கள், தேசிய சுதந்திரத்தை அடைதல், சமூக பொருளாதார ஏற்றத் தாழ்வுகளை ஒழித்தல், வர்க்கம், சமூகம், பால், இனம், மதம். சாதி என்ற அடிப்படைகளிலான ஒடுக்குமுறைகளை ஒழித்தல், கீழ்க் கோடுகளிலும், பொலிஸ் அலுவலகங்களிலும் சுயமொழிப் பிரயோகம் போன்ற கொள்கைகளை முன் வைத்தனர். இன வேறுபாடுகளைக் கடந்த ஓர் சக்தியாகவே ஆரம்பத்தில் இவ்விடதுசாரிகள் தோற்றம் பெற்றனர். அரசியற் கட்சி என்ற வடிவத்தில் இலங்கையிற் தோற்றம் பெற்ற முதலாவது ஸ்தாபனம் லங்கா சமசமாஜக் கட்சியாகும். இவர்கள் ஆரம்பத்திலிருந்தே பாராளுமன்றப் பாதையில் (அப்போது அரசாங்க சபை) நம்பிக்கையுள்ளவராயிருந்தனர்.

டொனமூர் அரசியற் திட்டத்தின்கீழ் இனமுரண்பாடுகள் தீவிரமாய் வளர்ந்து செல்ல தமிழ் மக்களிற்குச் சிங்களத் தலைவர்கள்மீது அவநம்பிக்கை வளர்ந்து வந்தது. குறிப்பாக 1936-ம் ஆண்டு வலதுசாரிகளால் தனிச் சிங்கள மந்திரிசபை அமைக்கப்பட்டதோடு முரண்பாடு மேலும் கூர்மையடைந்தது. டொனமூர் அரசியற் திட்டத்தின் கீழ் விவசாய அமைச்சராயிருந்த டி. எஸ். சேனநாயக்கா வரண்ட வலயங்களிற் குடியேற்றத் திட்டங்களை ஆரம்பித்தார். பாரம்பரியத் தமிழ்ப் பிரதேசங்களில் திட்டமிட்டுச் சிங்கள மக்களைக் குடியேற்றும் நடவடிக்கை 1940-ம் ஆண்டுகளில் ஆரம்பிக்கப்பட்டு இற்றைவரை தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. தமிழரைத் தமிழ்ப் பகுதிகளிற் சிறுபான்மையினராக்கி தமிழரின் தேசியத்திற்குரிய அத்தியாவசிய நிலைமையை இல்லாதாக்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். தமிழ்ப் பகுதிகளிலுள்ள பொருளாதார வளமுள்ள பிரதேசங்களே சிங்களக் குடியேற்றத் திட்டங்களுக்குட்பட்டிருக்கின்றதென்பது இங்கு குறிப்பிடத்தக்கது. கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளில் சிங்களக் குடியேற்றங்களைத் தாபிப்பதன் மூலம் தமிழ்ப் பகுதிகளிற்கிடையேயான தொடர்புகள் அறுக்கப்பட்டுள்ளன. சிங்கள மக்கள் குடியேற்றப்படும் பகுதிகளிற் கூடிய வசதிகள் செய்து கொடுக்கப்படுவதுடன் அப்பகுதிகள் சிங்களப் பகுதிகளுடன் போக்குவரத்துப் பாதைகள், மற்றும் போக்குவரத்துச் சாதனங்கள் போன்ற வசதிகளை வழங்குவதன் மூலம் இணைக்கப்பட்டு வந்துள்ளன. இதே வேளை மலையக மக்கள் வடக்குக் கிழக்குப் பகுதிகளிற் குடியேற



எடுக்கும் முயற்சிகள் ஆயுதப்படைகளாலும், வேறும் வழிகளாலும் தடைசெய்யப்பட்டுள்ளன.

டொனமூர் அரசியற் திட்டக் காலத்தில் இனப் பிரச்சினைக்குத் தீர்வாக 50 : 50 என்ற கோரிக்கை ஜி. ஜி. பொன்னம்பலத்தால் முன்வைக்கப்பட்டது. (50 : 50 என்பது பெரும்பான்மையினருக்கு சட்டசபையில் 50 ஆசனங்கள் இருந்தால் மிகுதி 50 ஆசனங்கள் ஏனைய சிறுபான்மை இனங்களிற்கென்பதே இதன் அர்த்தமாகும்.) இவ் 50 : 50 கோரிக்கை தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்க்க உதவியிருக்காது. இவ் 50 : 50 கோரிக்கை சோல்பரி விசாரணைக் குழுவால் நிராகரிக்கப்பட்டது. இதன்பின் 1948-ம் ஆண்டு இலங்கை சுதந்திரமடைந்தது.

## சுதந்திரத்தின் பின் :-

இந்தியா 1947-ம் ஆண்டு சுதந்திரமடைந்ததும் கணிசமான அள்வு அரசியற் போராட்டம் எதுவும் இல்லாமல் 1948-ம் ஆண்டு மாசி மாதம் 4-ந் திகதி இலங்கை பிரித்தானியரிடமிருந்து சுதத்திரம் அடைந்தது. ''சுதந்திர'' இலங்கையில் டி. எஸ். சேனநாயக்கா தலைமையில ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தை அமைத்தது. ''தமிழனென்று சொல்லடா; தலை நிமிர்ந்து நில்லடா'' என்று பெரும் கோஷமெழுப்பிய ஜி. ஜி. பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியும் அரசாங்கத்துடன் சேர்ந்துகொண்டது.

1944-ம் ஆண்டு ஜி. ஜி. பொன்னம்பலம் தலைமையில் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சி உதயமாகியது. இக்கட்சி சமஷ்டி அமைப்பல்லாத ஒற்றையாட்சி அரசியல் அமைப்பின்கீழ் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டுமென்ற கொள்கையை முன் வைத்தது. வடக்கு, கிழக்குக்கு வெளியே தமிழரின் நலன்கள் இருந்தமையாலும், மேலும் அதுபற்றிய சிந்தனைகள் இருந்தமையாலும், தமிழ் காங்கிரஸ் கொழும்பை மையமாகக் கொண்ட தலைமை என்பதனாலும் அது ஒற்றையாட்சிக் கொள்கைமீது நாட்டம் கொண்டது. சோல்பரி அரசியற் திட்டத்தின்படி கட்சிமுறை அவசிமென்பதால் டி. எஸ். சேனநாயக்கா 1946-ம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சியை தாபித்தார். சோல்பரி அரசியற் திட்டத்தின் முதலாவது தேர்தலில் டி. எஸ். சேனநாயக்காக வெற்றியீட்டி அரசாங்கத்தை அமைத்தார். 50 : 50 கோரிக்கை தோல்வி அடைந்ததும் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு எவ்விதமான வழிவகைகளையும், மார்க்கங்களையும் தேடாமற் பொன்னம்பலம் டி. எஸ். சேனநாயக்காவிடம் சரணடைந்து மந்திரிப் பதவியை நாடினார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



டொனமூர் அரசியற் திட்டக்காலத்தில் மலையக மக்கள் பிரச்சினைகளை எதிர்நோக்கியபோது நேருஜியின் ஆலோசனையின் பேரில் இலங்கை இந்தியர் காங்கிரஸ் ஆரம்பிக்கப்பட்டது. சுதந்திரமடைந்ததும் உடனடியாக மலையக மக்களின் வாக்குரிமையும், குடியுரிமையும் பறிக்கப்பட்டது. அரசாங்கத்துடன் இணைந்திருக்கும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசை மலையக மக்களின் இப்பிரச்சினையை மையமாகக் கொண்டு கண்டித்து எஸ். ஜே. வி. செல்வநாயகம் தலைமையில் சமஷ்டிக் கட்சி (தமிழரசுக் கட்சி) 1949-ம் ஆண்டு உதயமாகியது. மிக்க் குறுகிய காலத்துள் இக்கட்சி இலங்கையின் வடக்கு, கிழக்கு பகுதிகளிற் செல்வாக்குப் பெற்றது. இத்துடன் ஜி. ஜி. பொன்னம்பலத்தின் தலைமை மங்கத் தொடங்கியது.

ஐ. தே. கட்சியில் டி. எஸ். சேனநாயக்காவை அடுத்து கட்சித் தலைமை டட்லி சேனநாயக்காவிற்குப் போகககூடிய நிலை இருந்ததால் 1951-ம் ஆண்டு S. W. R. D. பண்டாரநாயக்கா ஐக்கிய தேசியக் கட்சியை விட்டு விலகி அவ்வாண்டே ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியைத் தாபித்தார். சிங்களம், தமிழ் ஆகிய சுதேச மொழிகளை உத்தியோக மொழிகளாக்காது ஐ. தே. க. காலம் கடத்தி வருவதாகக் கண்டித்தார். சுயமொழிகளை உத்தியோக மொழிகளாக்க வேண்டுமென்பது தமது கட்சியின் உடனடி நடவடிக்கையாகுமென்று குறிப்பிட்டார்.

இடதுசாரிகளிடையே பிளவுகள் ஏற்படத் தொடங்கின. 1940-ம் ஆண்டு லங்கா சமசமாஜக் கட்சியிலிருந்து பிரிந்தோர் தமக்கு ஐக்கிய சோஷலிஸ்ட் எனப் பெயரிட்டனர். இவ் ஐக்கிய சோஷலிஸ்ட் கட்சியே பின்பு 1943-ம் ஆண்டு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியானது. B. L. P. என மேலும் இடதுசாரிக் கட்சி ஒன்று தோன்றியது. இவ்வாறு இடதுசாரிகள் தம்மிடையே பிளவுண்டிருந்தவேளையிலும் 1947-ம் ஆண்டுத் தேர்தலின்போது பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியாய் இருக்கக்கூடிய அளவிற்கு ஆசனங்களைப் பெற்றிருந்தனர். 1947-ம் ஆண்டு கலாநிதி என். எம். பெரேரா எதிர்க்கட்சித் தலைவரானார். மார்க்ஸிஸ இடதுசாரிகள் இந்த நாட்டில் ஓர் அரசாங்கம் அமைக்க முடியாமைக்கு இடசாரிகளிடம் காணப்பட்ட ஐக்கியமின்மை ஓர் முக்கிய காரணமாகும். இடதுசாரிகளைத் தோற்கடித்தது இடதுசாரிகள்தான் என்று சொல்லுமளவிற்கு இடதுசாரிகள் மத்தியில் ஏற்பட்டிருந்த பிளவு காணப்பட்டது. 1953-ம் ஆண்டு ஹர்த்தாலின்போது இடதுசாரிகளின் சக்தி வெளிப்பட்டது.

1952-ம் ஆண்டு டி. எஸ். சேனநாயக்காவின் மரணத்தை தொடர்ந்து பிரதமரான டட்லி. சேனநாயக்கா இக் ஹர்த்தாலைக் கண்டு அஞ்சி நடுங்கினார். ஈற்றில் இதனால் பதவி துறந்தார். இடதுசாரிகள் மத்தியில் ஏற்பட்டிருந்த பிளவும் மாற்று அரசாங்கத்தை அமைப்பதற்குரிய நடவடிக்கைகளை அவர்கள் மேற்கொள்ளாமையும், இவர்களிடம் புரட்சிவாதத் தன்மையின்றித் தொழிற்சங்கவாதத் தன்மையே காணப்பட்டமையாலும் இச்சந்தர்ப்பத்தில் இவர்கள் ஆட்சியதிகாரத்தைப் பெறமுடியாமற் கைதவற விட்டனர். இவ்வேளையிற் தான் சேர். ஜோன் கொத்தலாவலை பிரதமரானார்.



அநகாரிக தர்மபால போன்றோரால் அத்திவாரமிடப்பட்டு வளர்க்கப்பட்ட இனவாதத் தன்மை மிக்க சிங்கள-பௌத்த தேசியவாத சக்தி சுதந்திரத்தின் பின்பு அரசியல் அரங்கில் முன்னணிக்கு வந்தது. 1954-ம் ஆண்டு அகில இலங்கை பௌத்த காங்கிரசினால் அமைக்கப்பட்ட விசாரணைக் குழுவின் அறிக்கையில் ஐ. தே. க. வின் ஆட்சி பௌத்தவிரோத ஆட்சி என வர்ணிக்கப்பட்டது. இச்சக்திதான் இரு மொழிக் கொள்கை என்பதற்குப் பதிலாகத் தனிச்சிங்களக் கொள்கை என்ற கருத்தை வலுவாக முன் வைத்தது. இச்சக்தியே ஆசியலை நிர்ணயிக்கக் கூடிய சக்தியென ஜே. ஆர். ஜெயவர்த்தன முன்கூட்டியே அடையாளம் கண்டிருந்தமையால் 1944-ம் ஆண்டு ஜே. ஆர். தனிச்சிங்களப் பிரேரணையை அரசாங்க சபையிற் பிரேரித்திருந்தார். ஆனால் அப்போதைய சூழ்நிலையில் சிங்களத்துடன், தமிழும் உத்தியோக மொழியாகும் எனத் திருத்தம் செய்யப்பட்டது. இந்தநிலையில் பண்டாரநாயக்கா இச்சக்திகளிற்கு அரசியற்தலைமை கொடுக்க முன்வந்தார். இதுவரைகாலமும் அரசியலில் ஒதுக்கப்பட்டிருந்த பௌத்த குருமார், சிங்கள மொழி ஆசிரியர்கள், நாட்டு வைத்தியர் ஆகியோரை பண்டாரநாயக்கா அரசியலிற் பிரதி நிதித்துவப்படுத்த முற்பட்டார். மேலும் பண்டாரநாயக்கா ஐ. தே. க. வை ஓர் ஏகாதிபத்தியக் கட்சியென வர்ணித்ததுடன் இலங்கையிலுள்ள பிரித்தானிய படைத்தளங்களை அகற்றுதல், மற்றும் தேசியமயமாக்கல் போன்ற கொள்கைகளை முன்வைத்தார். இந்நிலையில் புரட்சிவாத லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவர் பிலிப் குணவர்த்தன பண்டாரநாயக்காவுடன் கூட்டுச்சேர்ந்தார். லங்கா சமசமாஜக் கட்சி கம்யூனிஸ்ட் கட்சி என்பன பண்டாரநாயக்காவுடன் போட்டி தவிர்ப்பு ஒப்பந்தத்தை 1956-ம் ஆண்டுத் தேர்தலின் பொருட்டுச் செய்து கொண்டனர். 1950-ம் ஆண்டில் மத்தியரை இரு மொழிக் கொள்கையே தமது கொள்கையெனக் கூறிக்கொண்ட ஐ. தே. க. யும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் தனிச்சிங்களம் என்ற கொள்கையை முன்வைத்துத்தேர்தலிற் குதித்தனர். 1956-ம் ஆண்டு பண்டாரநாயக்கா தலைமையிலான மகாஜன எக்சத் பெரமுனையின் வெற்றி இனவாத அடிப்படையிலான சிங்கள-பௌத்தத் தேசியவாதத்தின் வெற்றியைக் குறித்து நிற்கின்றது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இடதுசாரிகள் ஆட்சியதிகாரத்தைப் பண்டாரநாயக்காவிடம் தாரை வார்த்துக் கொடுக்கும் வகையில் கூட்டுச் சேர்ந்ததன் மூலமோ அன்றிப் போட்டி தவிர்ப்பு ஒப்பந்தம் மூலமோ தாம் ஆட்சியதிகாரத்திற்கு வர அருகதை அற்றவர்கள் என்பதை வெளிப்படுத்தினார்கள். கம்யூனிஸ்ட் கட்சியும், லங்கா சமசமாஜக் கட்சியும் 1956-ம் ஆண்டுத் தேர்தலில் தமிழுக்குச் சம அந்தஸ்து என்ற கொள்கையிலிருந்து மாறுபடாதிருந்த போதிலும் பண்டாரநாயக்காவுடன் போட்டி தவிர்ப்பு ஒப்பந்தத்தையும் செய்து கொண்டார்கள்.

மூத்த இடது சாரித்தலைவர்களுள் ஒருவரான பிலிப் குணவர்த்தனா தனிச் சிங்களக் கொள்கையயை ஏற்றிருந்தார். கம்யூனிஸ்ட் கட்சியும், லங்கா சமசமாஜக் கட்சியும் தமிழும் உத்தியோக மொழியாக வேண்டுமென்ற கோரிக்கையை விட்டிருந்த போதிலும் தனிச் சிங்களக் கொள்கையை எதிர்த்து நேரடிப் போராட்டங்களில் ஈடுபடவில்லை. அத்துடன் தனிச் சிங்களக் கொள்கையை எதிர்த்து தெற்கிலுள்ள தொழிற் சங்கங்கள் எதுவும் போராட்டத்தில் ஈடுபடவில்லை.

1956-ம் ஆண்டு பொதுத்தேர்தலில் வடக்கு, கிழக்கில் சமஷ்டிக் கட்சி (தமிழரசுக் கட்சி) அதிகபலத்துடன் வெற்றி பெற்றதன் மூலம் தமிழ் மக்களின் தலைமைக் கட்சியாகியது. இத்துடன் ''பொன்னன் ஒரு விண்ணன்'' எனப்பட்ட ஜி. ஜி. பொன்னம்பலம் சகாப்தம் முடிவடையத் தொடங்கியது. அதேவேளை வசீகரமேடைப் பேச்சு அரசியலில் தனது முக்கியத்துவத்தை இழக்காமல் மேலும் முக்கியத்துவம் பெறத் தொடங்கியது, தேர்தலில் வெற்றி பெற்ற தமிழரசுக் கட்சி தனிச் சிங்களக் கொள்கையை எதிர்த்து பாராளுமன்றத்திற்கு வெளியில் நேரடிப் போராட்டங்களிலும் ஈடுபடத் தயாராகியது. பாராளுமன்றத்திற்கு 1956-ம் ஆண்டு தனிச்சிங்கள மசோதா கொண்டு வரப்பட்டபோது தமிழரசுக் கட்சி காலிமுகத் திடலில் சத்தியாக்கிரகத்திற்கு ஒழுங்கு செய்தது. ஆயினும் சிங்களக் காடையர்களால் இச்சத்தியாக்கிரகம் பலாத்காரமான முறையில் குழப்பப்பட்டது. பாராளுமன்றத்தில் தனிச் சிங்கள மசோதாவை எதிர்த்து லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி என்பன வாக்களித்தன. மகாஜன எக்சத் பெரமுன, ஐ. தே. க. மற்றும் சுயேட்சை அங்கத்தினர் என்போர் தனிச் சிங்கள மசோதாவை ஆதரித்து வாக்களித்தல் மூலம் நனிச் சிங்களச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. தனிச் சிங்களச் சட்டம் நிறைவேற்றப்பட்டவுடன் தமிழ், சிங்கள மக்களிடையேயான பிளவு வலுத்ததுடன் தமிழ்–சிங்கள உறவு மீண்டும் ஒன்றுபட முடியாதென்ற கட்டத்தைக் குறித்து நின்றது. தனிங் சிங்கள சட்டத்திற்கு எதிராகக் கொல்வின் ஆர். டி: சில்வா குறிப்பிட்ட வார்த்தையை இங்கு குறிப்பிடுதல் அவசியமாகும். அதாவது



''மொழி ஒன்றென்றால் நாடு இரண்டு. மொழிகள் இரண்டென்றால் நாடு ஒன்று.'' என்று அவர் கூறினார். இந்தவகையில் கொல்வின் ஆர். டி. சில்வா ஓர் தீர்க்கதரிசிதான் என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும். 1956-ம் ஆண்டு சிங்களப் பெருந் தேசிய வாதத்தின் வெளிப்பாடாண்டாய் அமைந்தது. சிங்கள கலாச்சாரத்தின் எழுச்சி இங்கு வரவேற்கத்தக்கதோர் அம்சமாக அமைந்திருந்த போதிலும் அது தமிழ் மக்களிற்கு எதிரான விரோதப் போக்கினைக் கொண்டதாய் அமைந்திருந்தமை மிகவும் பிழையானதும், துக்ககரமானதுமாகும்.

இக்கால கட்டம் தமிழரசுக் கட்சி நடாத்திய அகிம்சைப் போராட்டத்திற்கும், தென்னிலங்கையில் தமிழ் மக்களிற்கு எதிரான சிங்களக் காடையரின் தாக்குதல்களுக்கும் பிரசித்திபெற்ற காலகட்டமாகும். 1958-ம் ஆண்டுக் ''கலவரத்தில்'' தமிழ் மக்களின் மீது தென்னிலங்கையிற் தாக்குதல் இடம்பெற்றபோது இலங்கையிற் சிங்கள அரசாங்கங்களின் கீழ் தமிழருக்குப் பாதுகாப்பில்லை என்ற உணர்வு முதன்முறையாக ஏற்பட்டது.

1956-ம் ஆண்டுத் தனிச் சிங்களச் சட்டத்தைத் தொடர்ந்து வந்த காலகட்டத்தில் இடம்பெற்ற திருமலை யாத்திரை, சிங்களச் ஸ்ரீ எதிர்ப்புப் போராட்டம் என்பன 1958-ம் ஆண்டு கலவர அச்சுறுத்தலோடு தணிந்து போயின. பண்டா–செல்வா ஒப்பந்தமும் கிழிக்கப்பட்டது. ஆனால் இதன் பின்னணியில் உத்வேகம் பெற்ற தமிழ்ப் பேசும் மக்கள் 1961-ம் ஆண்டில் வடக்குக் கிழக்கில் இடம் பெற்ற சத்தியாக்கிரகப் போராட்டத்தில் கட்சி வேறுபாடின்றி மிகப் பெருமளவில் ஈடுபட்டனர். ஆனால் இப்போராட்டம் தென்னிலங்கையிலிருந்து கொண்டுவரப்பட்ட இராணுவத்தினால் இறுதியாக முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. இப்போராட்டமே மிகக்குறிப்பிடத்தக்க வகையீல் மக்கள் அதிகமாகக் கலந்து கொண்ட முதலும், இறுதியுமான நேரடிப் போராட்டமாக இதுவரை இருந்து வருகின்றது.

டாக்டர். எஸ். ஏ. விக்கிரமசிங்கா, கலாநிதி என். எம். பெரேரா, பிலிப் குணவர்த்தனா ஆகியோரைத் தலைவர்களாகக் கொண்ட இடது சாரிச் கட்சிகள் மூன்றும் 1963-ம் ஆண்டு கூட்டுச் சேர்ந்தன. ஆயினும், அற்ப ஆயுளுடன் இக் கூட்டுச் சேர்வு 1964-ம் ஆண்டு செத்துப் போய்விட்டது. இனிமேல் எதிர்காலத்தில் இந்த இடதுசாரிகள் கூட்டுச் சேர்ந்து மார்க்ஸிஸ இடதுசாரி அரசாங்கத்தை அமைக்க மாட்டார்கள் என்பதை இது மேலும் உறுதிப்படுத்தியது. தமிழும் உத்தியோக மொழியாக வேண்டுமென்ற கொள்கையைக் கொண்டிருந்த லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சிகள் என்பன



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



1965-ம் ஆண்டுப் பொதுத் தேர்தலின்போது தனிச்சிங்களச் சட்டத்தை ஏற்றுக்கொண்டவராய்த் தேர்தலில் ஈடுபட்டனர்.

1961-ம் ஆண்டைத் தொடர்ந்து 1979-ம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் தமிழரின் நிலையிற் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் எதுவும் ஏற்படவில்லை என்பதுடன் போராட்டங்களும் நடைபெறவில்லை, 1965ம் ஆண்டு டட்லி - செல்வா ஒப்பந்தம் கைச்சாத்தாகியது. தமிழரசுக் கட்சி, ஐ. தே. க. கூட்டரசாங்கம் - தேசிய அரசாங்கம் - அமைக்கப்பட்டது. ''தேசிய அரசாங்கத்தில்'' தமிழரசுக் க்ட்சியின் சார்பில் மு. திருச்செல்வம் மந்திரிப் பதவி பெற்றார், ஐ. தே. க, வுடன் தமிழரசுக் கட்சி சேர்ந்து தேசிய அரசாங்கம் அமைப்பது பற்றிய தீர்மானத்தை எடுப்பதில் முன்னின்றவர் கொழும்புக் காற்றையே சதா சுவாசித்துக்கொண்டிருந்த மு. திருச்செல்வம் ஆவார். 1967ம் ஆண்டு அடையாள அட்டை மசோதா சம்பந்தமாகத் தமிழரசுக் கட்சியுள் முரண்பாடு கொண்ட காவலூர் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த வி. நவரட்ணம் தமிழரசுக் கட்சியிலிருந்து விலகித் தமிழர் சுயாட்சிக் கழகத்தை தாபித்தார். தான் டட்லி - செல்வா ஒப்பந்தத்தை ஆரம்பத்திலிருந்தே எதிர்த்து வந்ததாக இவர் குறிப்பிட்டுள்ளார். டட்லி - செல்வா ஒப்பந்தம் தோல்வியில் முடிந்தது. தமிழர் சுயாட்சிக் கழகம் 1970ம் ஆண்டு பொதுத் தேர்தலுடனே தோல்வியுற்று விட்டது. தமிழர் சுயாட்சிக் கழகம் தமிழரிற்குத் தனிநாடு வேண்டுமென்ற கொள்கையை முன்வைத்து ஆரம்பிக்கப்பட்ட தாபனமாகும் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. ஐ. தே. க. செல்வநாயகத்துடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தை நிறைவேற்றாது விட்டபோதிலும் தமிழரசுக் கட்சியின் ஒத்துழைப்புடன் 5 ஆண்டு காலமும் தான் பதவியிலிருக்க வேண்டும் என்ற எண்ணத்தை அது அடைந்தது.

ஐ. தே. கட்சியும், தமிழரசுக் கட்சியும் இணைந்த தேசிய அரசாங்கம் பதவியிலிருந்த காலத்தில் 1967ம் ஆண்டு 'றோகண விஜேவீரா, தலைமையில் 'ஜனதா விமுக்திப் பெரமுன' (J. V. P.) ஆரம்பிக்கப்பட்டது. இவ்வியக்கயானது 1971 சித்திரை மாதம் ஆயுதக் கிளர்ச்சியில் ஈடுபட்டது. 14,000 இளைஞர்களைப் பலி கொடுத்தும், 20,000 இளைஞர்களைச் சிறையிலிட்டும் இக்கிளர்ச்சி தோல்வியில் முடிவடைந்தது. இதுவே இலங்கை வரலாற்றில் ஆயுதம் தாங்கிய கிளர்ச்சியின் மூலம் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்ற முற்பட்ட முதலாவது ''இடதுசாரி'' இயக்கமாகும்.

றோகண விஜேவீரா மொஸ்கோவில் வைத்தியப் பட்டப்படிப்பை மேற்கொண்டிருந்த காலத்தில் (1960 இன் முற்பகுதியில்) மொஸ்கோவிற்கும், பீக்கிங்குமிடையிலான தத்துவார்த்த வேறுபாட்டுப் பிரச்



சினையில் அக்கறை செலுத்தினார். இதில், இவர் பீக்கிங் சார்புடையவரானார். இப்பிரச்சினையைத் தொடர்ந்து இவர் மொஸ்கோவில் கல்வியைத் தொடர முடியாது போனது. இந்நிலையில் 1967ம் ஆண்டு தீவிரமாக சில கருத்தரங்குகளை வைத்து அக்கருத்தரங்கின் மூலம் J. V. P, யை ஸ்தாபித்தல் என்ற நிலைக்கு வந்தார்.

1967ம் ஆண்டு பொலிவியாவில் சேகுவேராக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டதும், சேகுவேராவின் கெரில்லா யுத்தம் பற்றிய நூல்களும், மற்றும் ஃபிடெல் கஸ்ரோவின் நூல்களும் 3ம் உலக நாடுகளின் தாய் அல்லது சுயமொழிகளில் மொழி பெயர்த்து கியூபா தூதுவராலயம் மூன்றாவது உலக நாடுகளில் விநியோகம் செய்தது. இவ்வாறாக, இலங்கையில் சிங்கள மொழியில் சேகுவேரா, கஸ்ரோவின் நூல்கள் வெளிவரத் தொடங்கின. குறிப்பாக, இந்நூல்கள் படித்த வேலையற்ற சிங்கள இளைஞர்களைப் பெரிதும் கவர்ந்தன, மேலும் 1960ம் ஆண்டுகளின் மத்தியில் சீனாவில் இடம்பெற்ற ''கலாச்சாரப் புரட்சி'' ஆசிய நாடுகளின் மத்தியில் புரட்சி சம்பந்தமாக ஓர் புத்துணர்ச்சியையும். கவர்ச்சியையும் ஏற்படுத்தியது. சீனாவிலிருந்து மாவோ சேதுங்; லிம்பியாவினது இராணுவப் படைப்புகள் அங்கிருந்து மொழிபெயர்க்கப்பட்டு இலங்கையில் விநியோகம் செய்யப்பட்டது. எனவே, ஒரு புறம் புரட்சி பற்றிய சிந்தனையும், அது இராணுவ ரீதியான புரட்சி என்ற சிந்தனையுடன் உருப்பெற்றதாக 1960ம் ஆண்டுகளின் மத்தியிலிருந்து புறச்சூழ்நிலை வளர்ச்சியடைந்து வந்துள்ளது. இதற்கு, இலங்கையிலுள்ள சிங்கள இளைஞர்கள் பெரிதும் ஆர்வம் காட்ட முற்பட்டனர்.

படித்த வேலையற்ற இளைஞர்கள், யுவதிகள், நிலமற்ற ஏழை விவசாயக் குடும்பங்களைச் சேர்ந்த இளைஞர்களும் அரசியலில் அதிக ஆர்வம் காட்ட முற்பட்டனர். இலங்கையில் 1965 — 70ம் ஆண்டு காலப் பகுதியில் தீவிர வலதுசாரி அரசாங்கம் பதவியிலிருந்தமையால் ஆயுதம் தாங்கிய அதிதீவிர இடதுசாரி எண்ணம் மேற்கூறிய சூழ்நிலையில் வளர்வது இலகுவாக இருந்தது. J. V. P. எவ்வளவுதான் தன்னையொரு இடதுசாரி ஸ்தாபனமெனக் கூறிய போதிலும் அடிப்படையில் அது ஒரு இனவாத ஸ்தாபனமாக இருந்தது. இவ் ஸ்தாபனத்தில் தமிழர்கள், முஸ்லிம்கள் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. குறிப்பாக, மலையக மக்களை இந்திய விரிவாதிக்கத்தின் கைக்கூலிகள் என வர்ணித்தது. இவர்கள் நடத்திய ஐந்து வகுப்புக்களில் ஒன்று ''இந்திய விஸ்தரிப்பு வாத எதிர்ப்பு'' என்பதாகும். ஆனால், அடிப்படையில் தமிழ் எதிர்ப்பு வாத என்ற நடைமுறையைக் கொண்டிருந்தது. இவர்கள் நடத்திய மற்றைய நான்கு வகுப்புக்களாவன:-

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



(1) பொருளாதார நெருக்கடி,

(2) சுதந்திரம் ஒரு நவகாலனித்துவ சூழ்ச்சி,

(3) இலங்கையின் இடதுசாரி இயக்கங்கள்,

(4) எப்பாதையில் புரட்சியை வழிநடத்துவது என்பனவாய் அமைந்தன.

இவர்கள் இலங்கையின் புரட்சிகர சக்திகளென ஐந்து வகையினரை (பஞ்ச பலவேகய) கணக்கிலெடுத்துக் கொண்டார்கள். அதில் விவசாயிகள் (Goyi), தொழிலாளர்கள் (Comkaru), பௌத்த சங்கம் என்பன பிரதான மூன்று வகையினராகும். இதில், பௌத்த சங்கத்தை புரட்சிக்கான ஒரு சக்தியாக கணிப்பிட்டமை இலங்கையைப் பொறுத்தவரை புரட்சியைக் கேலி செய்வதாகும். ஏனெனில் இலங்கையில் இனவாதத்தின் தளமாகவும், பல்வேறு பிற்போக்குவாதத்தின் தளமாகவும் பௌத்த சங்கங்கள் காணப்படுகின்றது. பௌத்த சங்கத்தின் இன்றைய நிலையை உடைத்து தகர்த்தெறியாமல் புரட்சி செய்வது என்பது சாத்தியமாகாது. ஒட்டுமொத்தமாகச் சொல்வதாயின் J. V. P. ஒரு இனவாதக் கூட்டமென்பதில் சந்தேகப்படுவதற்கில்லை.

J. V. P. இன் ஸ்தாபனத் தன்மையை நாம் சற்று நோக்குவோம். அது அடிப்படையில் இனவாதத்தில் அத்திவாரமிடப்பட்டது. இவர்களுக்குள் பல குழுக்களிருந்தன.

(1) மா - ஓ - சேதுங், விம்பியாவை ஆதரிக்கும் குழு. குறிப்பாக, இக்குழு அவர்களின் இராணுவ சிந்தனையாலேயே கவரப்பட்டது.

(2) சேகுவேரா, பிடல் கஸ்ரோவினது இராணுவச் சிந்தனையை பின்பற்றிய குழு.

(3) சீனாவின் மக்கள் யுத்தமென்ற சீனச் சார்பு தன்மையுள்ளவர்கள். ஆனால், இராணுவ சார்புடைவர்கள்.

(4) சோவியத் ருஷ்யா புரட்சி பாணி மீது நம்பிக்கையுள்ளவர்கள்.

(5) நாட்டுக்கேற்ற ஓர் புதுப் பாணியில் புரட்சியை நடத்த வேண்டும் என்ற கருக்கொண்டவர்கள்.

இவ்வாறு இவர்கள் பல்வேறு குழுக்களாக கருத்தொருவமைவு அற்றவர்களாக உட்பூசல் நிறைந்தவர்களாகக் காணப்பட்டனர். சுருங்கச் சொல்வதாயின், இவர்களை ஸ்தாபனமாகக் கருதமுடியாது. மாறாக, ஒரு கூட்டமென்றே சொல்லலாம்.



1970ம் ஆண்டுத் தேர்தலில் கூட்டு முன்னணி ஆதிக்கத்திற்கு வருவதற்கு இவ் (J. V. P) ஸ்தாபனத்தைச் சேர்ந்த பலர் துணை புரிந்திருக்கிறார்கள். ஐக்கிய முன்னணி பதவிக்கு வந்ததும் தமக்கு வேலை வாய்ப்புக் கிடைக்குமென பலர் நம்பியிருந்தனர். ஆனாலும் ஐக்கிய முன்னணி அரசாங்கம் பதவிக்கு வந்த ஏறக்குறைய ஓராண்டு காலப் பகுதியில் வேலை வாய்ப்புக்கான நம்பிக்கைக் கோடுகள் எதுவும் தென்படவில்லை, எனவே, உடனடிப் புரட்சி, சோஷலிசம் என்ற அதிதீவிரக் கருத்தை – ஊசலாட்டம் நிறைந்த இவ் மத்தியதரக் கருத்தை J.V.P. க்குள் முன்வைத்தார்கள், இதன் விளைவாக, துரித ஆயுத சேகரிப்பில் (கைக்குண்டு) ஈடுபட்டார்கள். திட்டவட்டமாக எந்த வெளிநாட்டுக் கொள்கையையோ, உறவையோ இவர்கள் கொண்டிருக்கவில்லை. குழப்பமான சூழ்நிலையில் பலகுழுக்களாக இருந்தவர்களை றோகண விஜேவீராவால் ஒன்றிணைக்க முடியவில்லை. மாறாக றோகண விஜேவீராவும் குழுவாத சிந்தனையுள்ளவராகவே இருந்தார். பீக்கிங் சார்புச் சிந்தனையுள்ள இவர் அதனை மூடி மறைத்து பல்வேறு குழுக்களின் மத்தியில் தன்னை ஒரு பொதுத்தன்மையுள்ளவராகக் காட்ட எடுத்த நடவடிக்கையே "நாட்டுக்கேற்ற சோஷலிசம்" என்ற கருத்தை முன்வைத்து, சகல குழுக்களையும் ஒன்றிணைக்க முற்பட்டார். ஆனால் இறுதியில் கிராமங்களைச் சுற்றி நகரங்களை வீழ்த்துதல் என்ற சீன யுத்த முறையில் தாக்குதலுக்கான அடிப்படைத் திட்டங்களை போட்டிருந்தார். இந்நிலையில் மிகக் குழப்பமான சூழ்நிலையில் ஐக்கிய முன்னணி பதவிக்கு வந்து மக்கள் மத்தியில் அது நம்பிக்கையிழக்காத சூழ்நிலையில், J. V. P. தன் மத்தியிலிருந்த உட்பூசல்களின் நிமித்தம் மிகக்குழப்பகரமான ஆயுதம் தாங்கிய கிளர்ச்சியிலீடுபட்டது.

இவ் ஆயுதக் கிளர்ச்சி ஆரம்பமாகியதும் ஐக்கிய முன்னணி அரசாங்கம் இதனைக் கண்டு பயப்பட்டது. உண்மையில் இலங்கை அரசாங்கம் ஸ்தம்பித்து விட்டது. ஆனாலும், ஒருங்கிணைக்கப்பட்ட சரியான திட்டமின்மையாலும், ஆட்சியதிகாரத்தினை பொறுப்பேற்பது பற்றி சரியான விளக்கமின்மையாலும், உட்பூசல்களாலும் கிளர்ச்சி அடிப்படையில் தோல்வியில் முடிவடைய காரணமாகியது. இலங்கை அரசாங்கம் வெளிநாட்டு உதவிகள், ஆலோசனைகள் குறிப்பாக, இந்தியாவின் ஆயுத, இராணுவ உதவியைப் பெற்று கிளர்ச்சியை உடனடியாக அடக்கிவிட்டது. 14,000 இளைஞர்கள் இரத்தப்பலி கொடுக்கப்பட்டார்கள். 20,000 இளைஞர்கள் சிறையில் தள்ளப்பட்டார்கள். இறுதியில், கிளர்ச்சி பூரண தோல்வியில் முடிவடைந்தது.

இக்கிளர்ச்சி தோல்வியுற்றமைக்கு பல காரணங்களுண்டு. திட்டமிட்டவகையில் ஸ்தாபனம் ஒருங்கமைக்கப்படவில்லை. ஸ்தாபனம் ஒழுங்கும் கட்டுக்கோப்பும், கொள்கைப் பற்றும் உள்ளதாக அமைக்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கப்படவில்லை. ஸ்தாபனத்திற்கு உறுப்பினர்களைச் சேர்ப்பதில் கட்டுப்பாட்டினை கடைப்பிடிக்கவில்லை. உளவுப் படைப் பிரிவைச் சேர்ந்தவர்களும் (C. I. D.) பல பிற்போக்காளர்களும் ஸ்தாபனத்தில் சேர்ந்து கொண்டனர். மேலும், இது ஸ்தாபனமாக இல்லாது பல குழுக்களின் கூட்டமாகவும், வகுப்புவாதம் நிறைந்ததாகவும், புரட்சிகர சித்தாந்த அறிவற்றதாகவும் இருந்தது. மார்க்ஸ் – லெனின் போன்றோர்களின் பெயர்களை ஆயிரம் தடவை உச்சரித்திருந்தாலும் நடைமுறை இதற்கு மாறாக இருந்தது. அத்துடன் இந்திய எதிர்ப்புவாதக் கொள்கை, சர்வதேச நிலைமைகளை கருத்திலெடுக்காமை, வெளிநாட்டு உறவுகளை மேற்கொள்ளாமை, உள்நாட்டு மக்கள் மத்தியில் வளர்ச்சியடையாமை, மக்களை ஸ்தாபன மயப்படுத்தாமை, மக்களை சோஷலிசத்தின் பொருட்டு ஒழுங்கமைக்காமை போன்ற பல காரணிகளின் மத்தியில் கிளர்ச்சி தோல்வியில் முடிவுற்றது. இந்த வரலாற்றில் J. V. P. இரு விடயங்களை உணர்த்தியுள்ளது.

(1) மரபுவழி இடதுசாரிகளைப் போலவே J. V. P. யும் இனவாத சகதிக்குள் புதைந்து கிடந்தது,

(2) சோஷலிசம் என்பதன் பெயரால் சோஷலிசத்தைக் குழிதோண்டி புதைக்க முற்பட்டமை என்பனவாகும்.

## குடியரசுக் காலம்

இலங்கை ''சுதந்திரமடைந்த'' பின்பு முதன் முறையாக 1970-ம் ஆண்டுத் தேர்தலிற்றான் மூன்றில் இரண்டு பங்குக்கு மேற்பட்ட பெரும்பான்மைப் பலத்துடன் ஆட்சி அமைக்கப்பட்டது. இவ் 2/3 பங்குப் பெரும்பான்மைப் பலத்தை பெற்றிருந்தமையால் ஐக்கிய முன்னணி அரசாங்கம் இலங்கையை ஓர் ''குடியரசு'' நாடாக்கும் தீர்மானத்தை எடுத்தது. இதன் மூலம் 1972-ம் ஆண்டு இலங்கை ''குடியரசாகப்'' பிரகடனப்படுத்தப்பட்டது.

1970-ம் ஆண்டைத் தொடர்ந்து தமிழ் மக்களின் வரலாற்றில் ஓர் பண்பு ரீதியான மாற்றங்கள் ஏற்படத் தொடங்கியது. மாறி மாறி ஆட்சிக்கு வரும் இரண்டு பெரும் சிங்கள இனவாதக் கட்சிகளும் (ஐ. தே. க., சிறீலங்கா சுதந்திரக் கட்சி) தனித்து அரசாங்கத்தை அமைக்கக்கூடிய அளவிற்குப் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை ஆசனங்களைப் பெறமாட்டாது என்ற நம்பிக்கை தமிழரசுக் கட்சியிடமிருந்தது, தம்மால் அரசாங்கத்தை ஆக்கவும் முடியும், அழிக்கவும் முடியும் என தமிழரசுக் கட்சி 1970-ம் ஆண்டுத் தேர்தற் பிரசார மேடைகளில் குறிப்பிட்ட கருத்தை இங்கு ஞாபகப்படுத்துதல் பொருத்தமாகும். தேர்தலின் பின்பு ஓர் சிங்கள இனவாதக் கட்சியுடன் பேரம் பேசி, அற்ப சொற்ப சலுகைகளுடன் சமரசம் செய்யும் கூட்டுச் சேர்வை ஏற்படுத்தலாமெனத் தமிழரசுக் கட்சி எண்ணி இருந்தது. ஆயினும் 1970-ம் ஆண்டுப் பொதுத்தேர்தல் முடிவு இதற்கு மாறாய் அமைந்தது.



இத்தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பெரு வெற்றியீட்டியது. திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தலைமையிலான ஐக்கிய முன்னணி மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மைக்கும் மேலான பலத்துடன் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தது. இத்தேர்தலில் லங்கா சமசமாஜக் கட்சியும், கம்யூனிஸ்ட் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்திருந்தன. தமிழரசுக் கட்சியின் உதவி எந்த வகையிலும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குத் தேவைப்படவில்லை. இதன்மூலம் தமிழரசுக் கட்சியின் பேரம் பேசும் நாடகம் முடிவடைந்தது. 1977-ம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் ஐ. தே. க. 2/3 பங்குக்கு மேற்பட்ட பெரும்பான்மைப் பலத்துடன் வெற்றி பெற்றமை எதிர் காலத்திலும் பேரம் பேசலுக்கு இடமில்லை என்பதை வெளிப்படுத்தியது என்பதை இங்கு கூறிச் செல்ல வேண்டியுள்ளது.

ஐக்கிய முன்னணி அரசாங்கம் 1972-ம் ஆண்டு முதலாவது குடியரசு அரசியற் திட்டத்தை வரைந்தது. இவ்வரசியற் திட்டத்தில் பௌத்த மதத்தைப் பேணிப் பாதுகாப்பது அரசாங்கத்தின் கடமை என்றும், அத்துடன் பௌத்த மதத்திற்கு அரசாங்கம் முதன்மைஅளிக்க வேண்டுமென்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. 1956-ம் ஆண்டு உருவாக்கப்பட்ட தனிச் சிங்களச் சட்டம் ஒரு சாதாரண சட்டமாகவன்றி 1972-ம் ஆண்டு அது அரசியல் திட்ட ரீதியாகவே உறுதிப்படுத்தப்பட்டது. பொதுவில், 1972-ம் ஆண்டு இலங்கை ஓர் சிங்கள பௌத்த நாடு என்று அரசியல் திட்ட ரீதியாகவே வரையறுக்கப்பட்டுவிட்டதென்று கூறலாம். சிங்கள பௌத்த பேரினவாதத்தின் உச்சக்கட்டமாக இது அமைந்தது. ''லங்கா சமசமாஜக் கட்சியும்'', ''கம்யூனிஸ்ட் கட்சியும்'' தனது ஆயுட் காலம் முழுவதற்குமான தவறை இதில் இணைத்து விட்டது. இவ்விரு கட்சிகளும் இனி ஒரு போதும் ஒரு சமாதானமும் கூறமுடியாதென்னுமளவிற்கு நடந்து கொண்டார்கள். சுருக்கமாகச் சொல்வதென்றால், இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியும், லங்கா சமசமாஜக் கட்சியும் சிங்கள பௌத்த பேரினவாதக் கட்சிகளாகின. சிங்கள பௌத்த பேரினவாதம் தென்னிலங்கையில் ''மார்க்ஸிஸ இடதுசாரிகள்'' என்று சொல்லிக் கொண்டவர்களை யெல்லாம் வெற்றி கொண்டு விட்டது. அரசியற், சமூக, பொருளாதார ரீதியிற் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியை ஒரு சோஷலிசக் கட்சியாக மாற்றுவதற்காகவே அத்துடன் கூட்டுச் சேர்ந்ததாகக் கூறிக் கொண்ட தென்னிலங்கை மார்க்ஸிஸ இடதுசாரிகள், தாங்கள்தான் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் எண்ணத்திற்கு மாறிப் போனார்கள். இவர்களின் வேடிக்கையாக 'மாற்றப் போய் மாறிப் போனவர்கள்'

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எனக் குறிப்பிடலாம். தென்னிலங்கை மார்க்ஸிஸ இடதுசாரிகள் எவ்வளவு தூரம் மார்க்ஸிஸ்டுகள் என்பது ஆராய்ச்சிக்குரிய விடயமாகும்.

1972-ம் ஆண்டில் இலங்கையின் பிரதான தமிழ்க் கட்சிகளான அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், இலங்கைத் தமிழரசுக் கட்சி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆகியன இணைந்து தமிழர் கூட்டணி என்னும் அமைப்பை உருவாக்கினர். கூட்டணி பழைய முறைமையிலான கோரிக்கைகள், விண்ணப்பங்கள், கறுப்புக்கொடி, கதவடைப்பு, உண்ணுவிரதம் போன்ற போராட்டங்களை நடத்தியது. ஆனால் அரசாங்கம் எந்தவித கோரிக்கைக்கும் செவிசாய்க்கவில்லை. இந்த நாட்டில் தமிழ் பேசும் மக்கள் வாழ்கிறார்கள் என்பதை அரசாங்கம் மறந்துவிட்டது. சுருங்கச் சொல்வதாயின், தமிழ்ப் பேசும் மக்களை ஐக்கிய முன்னணி அரசாங்கம் உதாசீனம் செய்தது.

இலங்கையில் வேலையில்லாப் பிரச்சினை, கல்விப் பிரச்சினை, மற்றும் பொருளாதாரப் பிரச்சினை என்பன கூர்மையடையத் தொடங்கின. இவற்றின் பின்னணியில் 1970-ம் ஆண்டுகளில் பல்கலைக் கழக அனுமதிக்கு இன ரீதியான தரப்படுத்தல் அறிமுகப்படுத்தப்பட்டது. இதனால் பல்கலைக் கழக அனுமதிக்கு தமிழ் மாணவர், சிங்கள மாணவர்களை விட அதிகமான புள்ளி எடுக்க வேண்டியிருந்தது. இதனால் நேரடியாக யாழ்ப்பாணத் தமிழ் மாணவர்களே பெரிதும் பாதிக்கப்பட்டனர். இது மாணவர்களை நேரடியாக அரசியலிற்கு முன் தள்ளியது. இந்தப் பிரச்சினைக்கும் அரசியலில் பொதுவாக ஒரு காரணம் மட்டும் இருப்பதில்லை. வேறு பல காரணிகளின் பின்னணியில் தரப்படுத்தல் தமிழ் இளைஞர்களை அரசியல் மயப்படுத்துவதில் ஓர் உடனடிக் காரணியாய் அமைந்தது.

அமிர்தலிங்கம், சிவசிதம்பரம் போன்றோர் 1970-ம் ஆண்டுப் பொதுத் தேர்தலிற் தோல்வியுற்றுப் பாராளுமன்றத்திற்கு வெளியே இருந்தமை அரசியலைத் தீவிரப்படுத்த உதவியது. ஐக்கிய முன்னணி ஆட்சிக் காலத்தில் ஆறு ஏழு தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்திற்கு ஆதரவாய் இருந்தமையால் பாராளுமன்றத்திற்கு உள்ளும் புறமும் அரசாங்கத்தை எதிர்ப்பதில் கூட்டணி தீவிரம் காட்டியது. ஜீ. ஜீ. பொன்னம்பலம், எஸ். ஜே: வி. செல்வநாயகம் போன்றோர்கள் சகாப்தம் முடிவுற்றமையால் (மரணம்) அமிர், சிவா போன்றோர் தமது நிலைமையை உறுதிப்படுத்த வேண்டிய ஓர் காலகட்டமாக 1970-ம் ஆண்டுகள் காணப்பட்டது.

1974-ம் ஆண்டு வட்டுக்கோட்டைத் தீர்மானத்துடன் தனிநாட்டுக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. இத்துடன் தமிழர் கூட்டணி



என்பது 'தமிழர் விடுதலைக் கூட்டணி' என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது. ஆரம்பத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆதரவு கொடுத்தாலும் அது தனி நாட்டுக் கோரிக்கைக்கு ஆதரவு கொடுக்கவில்லை.

1970-ம் ஆண்டுகளைத் தொடர்ந்த காலகட்டம் இளைஞர்களின் காலகட்டமாகும். அதாவது இக்கால கட்டத்தில் முதிர்ச்சி அடைந்து வந்த அரசியற் பிரச்சனைகளின் மத்தியில் இளைஞர்கள் தீவிரமாகத் தமது பங்கைச் செலுத்த வேண்டி இருந்தது. அகிம்சைரீதியான போராட்டங்கள் எதுவித பயனையும் அளிக்காததைக் கண்ட இளைஞர்கள் ஆயுதங்களை அரசியலுட் புகுத்தத் தொடங்கினர். அரசியலில் ஆயுதத்தின் வரவானது இளைஞர்களையே அரசியலில் முன்னணிக்குக் கொண்டு வந்தது. இக்கால கட்டத்தில் அமிர், இளைஞர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவராக மதிக்கப்பட்டார். இளைஞர்களைத் திருப்திப்படுத்தும் வகையில் அமிர் நடந்துகொண்டார். 1970-ம் ஆண்டு ஆரம்பத்தில் அரசியலில் ஈடுபட்ட இளைஞர்கள் கைது செய்யப்பட்டு வருடக்கணக்காகச் சிறையில் வைக்கப்பட்டிருந்தமை இளைஞர்களை மேலும், மேலும் அரசியலில் ஈடுபடுத்த உதவியது.

வரலாற்றாசிரியர்களாலும், வெளிநாட்டாட்சியாளர்களாலும் அமைதியான மக்கள் எனக் கூறப்பட்ட இலங்கைத் தமிழர் நவீன வரலாற்றில் முதல் தடவையாக 1970-ம் ஆண்டுகளில் ஆயுதமேந்தியதைக் காணக்கூடியதாயுள்ளது. அரசாங்கத்தை ஆதரித்த தமிழ் அரசியல்வாதிகள், இளைஞர்களின் அரசியல் நடவடிக்கைகளில் புலன் விசாரணையில் ஈடுபட்ட பொலிசார், மற்றும் பொலிசாருக்குத் தகவல் கொடுப்போர் என்போர் இளைஞர்களால் கொல்லப்பட்டனர். இவ்வாறு ஈடுபட்ட இளைஞர்கள் தமது நடவடிக்கைகளுக்காக வங்கிக் கொள்ளைகளில் ஈடுபடத் தொடங்கியதுடன் ஓர் புதிய திருப்பத்தை இளைஞர் அரசியல் அடையத் தொடங்கியது.

1974-ம் ஆண்டுத் தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டுப் படுகொலையைத் தொடர்ந்து வடபகுதியின் அரசியல்நிலை மேலும் கொந்தளிப்படையத் தொடங்குகின்றது. இவ்வாறான நடவடிக்கைகள் இளைஞர்களின் அரசியல் நடவடிக்கைகளை ஆதரிக்கவைத்தன. ஆயுதப்படையினரின் வருகையும், தாக்குதலும் நாளுக்கு நாள் அதிகரித்தன. இதன் பின் தமிழ்ப்பிரதேசங்களில் ஆயுதப் படையினரின் தாக்குதல் நடவடிக்கைகள் தமிழ்மக்களின் அன்றாட வாழ்க்கையின் ஓர் அம்சமாக மாறியுள்ளது.

சுதந்திரத்திற்குப் பின்னர் பல தனிப்பட்டவர்கள் தமிழரிற்கு ஓர் தனி நாடு வேண்டுமென்ற கொள்கையை முன் வைத்த போதிலும் இவர்கள் (இவர்களுள் ஸி. சுந்தரலிங்கம், வி. நவரத்தினம் என்போர் குறிப்பிடத்தக்கவர்கள்) மக்களாதரவைப் பெறவில்லை. 1974-ம் ஆண்டு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வட்டுக்கோட்டைத் தீர்மானத்துடன் முன்வைக்கப்பட்ட தனிநாட்டுக் கோரிக்கையை முன் வைத்து 1977-ம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி போட்டியிட்டு வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பெரும்பான்மை ஸ்தானங்களைக் கைப்பற்றியது.

1977-ம் ஆண்டு தேர்தல் மூலம் ஐ. தே. கட்சி மிகப் பெரும்பான்மைப் பலத்துடன் ஆட்சிக்கு வந்தது, ஐ. தே. க. தனது 1977-ம் ஆண்டு தேர்தல் விஞ்ஞாபனத்தில் தமிழ் மக்களிற்குப் பல பிரச்சினைகள் உண்டு, அதனைத் தாம் தீர்க்கவேண்டுமென்று குறிப்பிட்டிருந்த போதிலும் பதவிக்கு வந்ததும் அது நடாத்திய மிகப் பெரிய வேலை தமிழ் மக்களிற்கு எதிரான ஓர் இனக்கலவரத்தை நடாத்தியமையாகும். கலவரம் தொடங்கி முதலிருதினங்களும் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்படவில்லை. மாருகப் ''போர் என்ருல் போர்......'' என்று தமிழருக்கெதிரான கலவரத்தை ஜே. ஆர். தூண்டினுர் அரச கட்டுப்பாட்டின் கீழிருந்த வானொலியும், பத்திரிகைகளும் தமிழரிற்கெதிரான கலவரத்திற்குத் தூபமிட்டன. வடக்கில் தமிழர் மீது இராணுவமும், பொலிசாரும் தாக்குதலில் ஈடுபடத் தெற்கில் சிங்களக் காடையர் தமிழர்மீது தாக்குதலில் ஈடுபடுத்தப்பட்டனர். இதனுல் தமிழரின் உயிர் உடமை, என்பவற்றிற்குப் பலத்த சேதமேற்பட்டது. 1958-ம் ஆண்டு கலவரத்தின் பின்பு இரண்டாவது தடவையாக தெற்கிலிருந்து தமிழர் 1977-ல் கப்பலேற்றி அனுப்பப்பட்டனர். 1958-ம் ஆண்டு கலவரத்தாற் பாதிக்கப்படாத மலையகத் தமிழர் 1977-ம் ஆண்டில் பெருமளவு பாதிக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

1977-ம் ஆண்டு கலவரத்தோடு தமிழ், சிங்கள உறவு மிகக் கீழ்நிலை அடைந்தது. 1977-ம் ஆண்டு கலவரம் தமிழ் அரசியலில் ஆயுதம் தாங்கும் அரசியலை மேலும் உத்வேகப் படுத்தியது. இயக்க நடவடிக்கைகட்காக பெருமளவில் வங்கிக் கொள்ளைகள் இடம் பெற்றன. ஆரம்பத்தில் துரோகிகளை ஒழித்தல், உளவுப்படையை அழித்தல் என்று தொடங்கிப் பின்பு பிரச்சினையை தூர விடாது வைத்திருத்தலுக்கான தாக்குதல் என்று தாக்குதல் நோக்கத்தில் ஒருபடி மாற்றப்பட்டது. இவ்வாறு மாறி, மாறிப் பெற்றுவந்த வடிவங்களில் அடுத்த கட்டமாக ஆயுதங்களைச் சேகரித்தல், ஆயுதப்படைக்குச் சவால் விடுதல் என்னும் வடிவங்களையும் அடைந்தது. இவை இறுதியாக ஆயுதப் படையினரை தமிழ்ப் பிரதேசத்திலிருந்து துரத்திவிடலாமென்ற நோக்கத்துடன் செய்யப்படுகின்றன.

1977-ம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் கூட்டணி வடக்குக், கிழக்கில் பெரும்பான்மை ஆசனங்களைக் கைப்பற்றியதும் நாம் தமிழ் மக்களிடம் தமிழீழமும் அமைப்பதற்கான ஆணையைப் பெற்றுள்ளதாகவும், அதற்கான 'அந்நிய நாட்டில் அரசு' (Government in Exile) அமைக்கப் போவதாகவும் உறுதியளித்தனர். 1977ம் ஆண்டு இனக்கலவரத்தால்



அச்சுறுத்தப்பட்ட தென்னிலங்கை குறிப்பாகக் கொழும்பு மேற்தர, மத்தியதர வர்க்கத்தின் அமுக்கம் கூட்டணியை அரசாங்கத்துடன் மென்மையாகச் சமரசம் செய்யும் பாதையை எடுக்க வைத்தது. கூட்டணி அரசாங்கத்துடன் சமரசப் பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டது. இதன் மூலம் மாவட்ட அபிவிருத்திச்சபை அமைக்கப்பட்டது. கூட்டணியின் சமரசப் பேச்சு வார்த்தைகளை கூட்டணிக்குள் ஒருகுழு கண்டித்து கூட்டணியிலிருந்து வெளியேறியது. இவ் அபிவிருத்திச்சபைகளைக் கூட்டணி ஏற்றதை எதிர்த்து சகல இளைஞர் இயக்கங்களும், அரசியற் பத்திரிகைகளும், வேறும் பிரசுரங்களும் பலத்த எதிர்ப்புத் தெரிவித்தன. இவ்வாருன பலத்த எதிர்ப்பின் மத்தியில் கூட்டணி அபிவிருத்திச் சபைகளைப் பொறுப்பேற்றிருந்த போதிலும் நடைமுறையில் அதனுல் எத்தகைய பயனும் ஏற்படவில்லை.

தமிழ் மக்கள் மத்தியில் வீராவேசப் பேச்சுக்களைத் தமிழ்த் தலைமைகள் பேசிவிட்டு கொழும்புத் தமிழ்த் தலைமைகள் தெற்கில் அரசாங்கத்துடன் சமரசம் செய்து கொள்வது கடந்த கால வரலாறு முழுவதும் ஓர் சகஜமான விடயமாகும். இந்த வகையில் அரசாங்கத்துடன் கூட்டணி அபிவிருத்திச்சபை என்ற பெயரில் செய்ய முற்பட்ட சமசத்தை குழப்புவதில் இளைஞர்கள் ஆயுதத்தைப் பிரயோகித்தனர். இளைஞர்கள் இனி தம் சமரசத்திற்குத் தயாரில்லை என்பதை ஆயுத முனையில் உணர்த்த முற்பட்டார்கள்.

1977, 1979, 1981, 1983 ஆகிய ஆண்டுகளிற் தொடர்ந்து தமிழரிற் கெதிரான இனக் கலவரங்கள் ஏற்பட்டன, 1983-ஆம் ஆண்டுக் கலவரமே இலங்கையில் ஏற்பட்ட கலவரங்கள் அனைத்துள்ளும் பெரியதாகும். இதில் தமிழர் பெருமளவில் உயிரையும், உடமையையும் இழந்தனர். ஒவ்வொரு இனக் கலவரமும், தமிழ் மக்களிற்கெதிரான பொலிஸ், இராணுவத்தின் நடவடிக்கைகளும் தமிழ் மக்கள் மத்தியில் ஆயுதம் தாங்கிய இளைஞர் இயக்கங்களிற்கு ஆதரவைப் பல்கிப் பெருக வைத்தன. ஆயுதம் தாங்கிய இளைஞர் இயக்கங்களிற்கு அரசாங்கமே ஆள் சேகரிப்பைச் செய்து கொடுத்தது என்று கூறுவது பொருத்தமானது. பிரச்சினையைப் பார்த்துக்கொண்டு மதில் மேல் பூனையாக இருந்தவர்களை எல்லாம் தமிழீழப் பக்கம் அரசுதுரிதமாகத் தள்ளிவிட்டது. 1983-ம் ஆண்டு இலக்கலவரம் இனவாத அரசாங்கத்தை உள் நாட்டுரீதியாகவும், சர்வதேச ரீதியாகவும் பலவீனப்படுத்தியது.

1983-ம் ஆண்டு கலவரத்தைத் தொடர்ந்தும் தமிழீழத்திற்காகப் போராடும் இளைஞர் இயக்கங்களிற்கு வெளிநாடுகளிற் பெரும் ஆதரவு கிடைத்தது, வெளிநாடுகளில் வாழும் தமிழர் இயக்கங்களில் அதிக நிதி உதவிகள் செய்ய முற்படுவதையும், அதேவேளை இந்தியாவிலும் பெரும் உதவிகள் கிடைக்கத்தொடங்கின, பெரும் கஷ்டப்படாமலே இளைஞர்களுக்கு இலகுவாக ஆயுதப் பயிற்சியளிப்பது சாத்தியமாகியது. இதனுல் மந்தகதியில் இருந்த இயக்கங்கள் பல திடீரென ஆயுதப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பயிற்சி பெறுவதில் வளர்ச்சியடைந்தன. திடீர்வளர்ச்சி போராட்டத்திற் கற்பனையையும், ஸ்திரமின்மையையும் ஒருவகைத் தங்கிநிற்றலையும் உருவாக்கியுள்ளது. இது போராட்டத்தின் போக்கை இலகுவாக வலதுசாரிப் பாதைக்குத் திருப்பக்கூடிய வகையில் அமைந்துள்ளது. சோஷலிச அரசை அமைப்பது தென்னாசிய அரசியற் பொருளாதாரச் சூழ்நிலையில் ஒரு இலகுவான விடயமல்ல. மிக நீண்டதூரப் பார்வையோடு, மிக நுணுக்கமாகத் திட்டமிட்டு நடந்தால் மட்டுமே இது சாத்தியமாகும் அல்லது, தமிழீழம் என்னும் ஓர் அரசு அமைந்தாலும்கூட அது இந்தியாவின் ஒரு சேரியாகவே அமைந்துவிடக்கூடும். தென்னாசியச் சூழ்நிலையில் தமிழீழப் போராட்டத்தின் புவியியல் அமைவிடம் போராட்டத்தை இலகுவாக்குவதற்கான அனுகூலங்களைக் கொண்டுள்ளது. இதே அனுகூலம் போராட்டத்தை வலது சாரிப் பாதைக்கு இழுக்கக்கூடிய் தன்மையையும் கொண்டுள்ளது.

இன்று தமிழீழத்திற்காகப் போராடும் சகல இளைஞர் இயக்கங்களும் தம்மை மார்க்ஸிஸ இடதுசாரி இயக்கங்கள் என்றே குறிப்பிடுகின்றன. எவ்வளவுதான் சோஷலிசத்தைப் பற்றிக் கூறிக்கொண்டாலென்ன சோஷலிச அரசென்பது ஸ்தாபனரீதியான அமைப்பிலேயே பெரிதும் தங்கியுள்ளது. சிலி நாட்டில் டாக்டர் அலண்டேக்கு மக்கள் மத்தியில் பெரும் ஆதரவு இருந்தது. ஆயினும் அவர் ஆட்சிக்கு வந்ததும் உடனடியாகவே ஈடாட்டப்பட்டார். ஏனெனில், அவரிடம் சோஷலிச அமைப்பிற்கான ஸ்தாபன அமைப்பு இருக்கவில்லை. இறுதியில் முழுமையாக அலண்டே தோற்கடிக்கப்பட்டுக் கொல்லப்பட்டார். எனவே மக்களாதரவுடன் சோஷலிசத்திற்கான ஸ்தாபன அமைப்பே மிகமிக அவசியமானது.

தமிழீழத்திற்காகப் போராடும் இளைஞர் இயக்கங்களை மூன்று பிரிவுகளாக வகுக்கலாம். ஒன்று கெரில்லாப் போராட்டத்தந்திரோபாயத்திற்கூடாகவே போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லலாம் என்ற இயக்கங்கள். இரண்டு கெரில்லாப் போராட்ட நடவடிக்கைகளுக்கூடாக வளர்ந்து பின்பு கெரில்லாப் போராட்டத்தைப் பிழை என்று கூறிய இயக்கங்கள் கெரில்லாப் போராட்டத்திலிருந்து தமது இயக்க நடவடிக்கைகளை அவர்கள் ஆரம்பிக்காமற் கெரில்லாப் போராட்டத்தையே பிழை என்று கூறிவந்த இயக்கங்கள் என இவற்றை மூன்று பிரிவுகளாக வகுக்கலாம். 1984-ம் ஆண்டில் நின்று இந்த இயக்கங்களைப் பார்ப்போமாயின் இன்று இந்த மூன்று பிரிவில் எந்த ஒருபிரிவினரை எடுத்துக் கொண்டாலும் அவர்கள் ஏதோ ஒரு வகையில் கெரில்லாப் போராட்டத்தில் நடைமுறையில் ஈடுபட்டுத்தானுள்ளனர், இதிற்சில விதிவிலக்குகள் இருக்கலாம். ஆயினும் இதன் பொதுவான வரலாற்றுப் போக்கு இற்றைவரை (1980 டிசம்பர்) இவ்வாறுதான் அமைந்துள்ளதென்று கூறலாம்.

இன்று தமிழீழ விடுதலைப் போராட்டத்திலீடுபட்டுள்ள இருபதிற்கும் மேற்பட்ட இளைஞர் இயக்கங்கள் காணப்படுகின்ற போதிலும்



அவற்றுள் முக்கியமாக ஏழு இயக்கங்களை மட்டும் இங்கு கருத்தில் எடுத்துக்கொள்வோம். அவையாவன, 1, தமிழீழ விடுதலை புலிகள் (LTTE) 2. தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (PLOT), 3, தமிழீழ விடுதலை இயக்கம் (TELO) 4, தமிழீழ விடுதலை இராணுவம் (TELA) 5. ஈழப்புரட்சி இயக்கம், (EROS) 6, ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (EPRLF) 7. தமிழீழ தேசிய விடுதலை முன்னணி (NLFT) என்பனவாகும். இவற்றுள் NLFT தவிர்ந்த முதல் ஆறு இயக்கங்களும் வலதுசாரி அரசியல் முகாமிலிருந்து உதித்து இடதுசாரிக் கொள்கையைத் தமது கொள்கையாகப் பிரகடனப் படுத்தியுள்ள இயக்கங்களாகும். இந்த ஆறு இயக்கங்களில் முதன் நான்கும் ஒரே வாழையடியைச் சேர்ந்த இயக்கங்களாகும், இவை நான்கும் ஆயுதங்களின் மூலம் தம்மை அரசியல் அரங்கில் அறிமுகப்படுத்திக்கொண்ட இயக்கங்களாகும். அதாவது, ஆயுதம் தாங்குவதன் மூலமே தமிழ்மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளலாமென்ற சிந்தனைப் போக்கு 1970-ம் ஆண்டுகளின் ஆரம்பத்தில் இளைஞர்களின் மத்தியிற் தோற்றம் பெறத் தொடங்கியது. தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறை நடவடிக்கைகளினால் அரசாங்கத்தின்மீது வெறுப்படைந்த இளைஞர்கள் ஆங்காங்கே ஆயுதம் தாங்கிய சில நடவடிக்கைகளின் மூலம் ஆயுதம் தாங்கிய இளைஞர் குழு ஒன்று தோற்றம் பெற்றது. இவ் இளைஞர் குழுவிலிருந்து ஆயுதம் தாங்கிய இரு இளைஞர் இயக்கங்கள் தோற்றம் பெற்றன. ஒன்று புதிய தமிழ்ப் புலிகள் T. N. T. என்று தொடங்கிப் பின்பு தமிழீழ விடுதலைப் புலிகள் என்று பரிணமித்த இயக்கமும், மற்றையது தமிழீழ விடுதலை இயக்கமுமாகும், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருந்து தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் எனும் இயக்கம் தோன்றியது. தமிழீழ விடுதலை இயக்கத்திலிருந்து தமிழீழ விடுதலை இராணுவம் என்னும் இயக்கம் தோன்றியது. இந்நான்கு இயக்கங்களும் ஒரே வாழை அடியைச் சேர்ந்தவையாக ஆயுதம் தாங்கிய நடவடிக்கைகள் மூலம் தம்மை அரசியலிற் பிரபல்யப் படுத்தத் தொடங்கிய இயக்கங்களாக உள்ளன. காலகதியில் இவர்கள் மிதவாத வலதுசாரிக் கூட்டணி முகாமுடன் முரண்பாடடைபவர்களாகவும், தீவிரவாதப் போக்குடைய இடதுசாரிக் கொள்கையைத் தழுவியவர்களாகவும் தம்மைப் பிரகடனப்படுத்தியுள்ளனர். ஈழப் புரட்சி இயக்கம் இடதுசாரி மனப்போக்குடன் வலதுசாரி முகாமிலிருந்து தோன்றிய இயக்கமாகும். இவ்வியக்கத்திலிருந்து ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தோற்றம் பெற்றது. இவ்விரு இயக்கங்களும் ஒரு வாழையடியைச் சேர்ந்தவை. மொத்தத்தில், இவ் ஆறு இயக்கங்களும் வலது சாரி முகாமிலிருந்து உற்பத்தியாகி இருவாழையடி அணிகளாகக் கிளைவிட்டு ஆறு இயக்கங்களாகப் பெருகியுள்ளன, ஏழாவது இயக்கமாகிய தமிழீழத் தேசிய விடுதலை முன்னணி இலங்கை தழுவிய சீன சார்புக் கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து தோற்றம் பெற்ற ஓர் கிளையினராவர். இவர்கள் மாசேதுங்கின் சிந்தனையினால் அதிகம் கவரப்பட்டவர்

www.tamilarangam.net



களாய் இலங்கை அடங்கலுமான வர்க்கப் புரட்சியின்மீது அதிக நம்பிக்கையுடன் செயல்பட்டுக் காலகதியில் தமிழீழ விடுதலையே சரியான போராட்டமென்ற முடிவுக்கு வந்துள்ளவர்களாவர். மாசேதுங்கின் மக்கள் ஜனநாயகம் என்ற கோட்பாட்டின்மீது அதிக நம்பிக்கை கொண்டு செயற்படும் இவர்கள் தற்போது மாசேதுங் என்ற பெயரிற்கு அதிக அழுத்தம் கொடுப்பதாகத் தெரியவில்லை. இவர்கள் இதுவரை (1984 டிசம்பர்) ஆயும் தாங்கிய நடவடிக்கைகள் எதிலும் ஈடுபடவில்லை ஆயினும் ஆயுதப் போரட்டத்தின் மூலமே விடுதலை பெறலாமென்ற கொள்கையைக் கொண்டுள்ளனர்.

1977-ம் ஆண்டு பதவிக்கு வந்த ஐ. தே. க. அரசாங்கம் மேற்கத் தேச ஏகாதிபத்தியத்திற்குச் சார்பான அரசியற் பொருளாதாரக் கொள்கையினைக் கடைபிடிக்கத் தொடங்கியது. இலங்கை அரசு அமெரிக்க சார்பு வெளியுறவுக் கொள்கையினைக் கடைபிடிக்கத் தொடங்கியமையால் பாதிப்புக்கள் ஏற்படத் தொடங்கின ஐ.தே.க. ஆட்சியின் கீழ் இன ஒடுக்குமுறை மேலும் புதிய பரிமாணங்களை அடையத் தொடங்கியது இலங்கையில் ஏற்பட்டு வந்த இன ஒடுக்கு முறைகளை எதிர்த்து தென்னிந்தியாவில் அரசியற் போராட்டங்கள் உருவாகின. இந்தவகையில் இந்தியாவின் பாதுகாப்பு என்ற ரீதியிலும், இந்திய மத்திய அரசை இலங்கையின் இனப் பிரசினையில் தலையிடுமாறு தென்னிந்தியாவில் போராட்டங்கள் எழுந்தமையாலும், இலங்கையில் வாழும் இந்தியர் மீதான ஒடுக்கு முறை என்பதன் பேராலும் இந்திய மத்திய அரசாங்கம் இலங்கையின் பிரச்சினையில் அக்கறை எடுக்கத் தொடங்கியது, இலங்கையைப் பொறுத்தவரை இந்தியாவிற்கு ஓர் பெரும் சிக்கலுண்டு, அதாவது ஒருபுறம் இலங்கையில் அமெரிக்காவின் கை ஓங்குவது இந்தியாவின் பாதுகாப்புக்கு உகந்ததல்ல. அதேவேளை மறுபுறம் இலங்கை இரு அரசுகளாகப் பிரிக்கப்படாமல் ஒரு அரசாக இருப்பதுதான் (ஒப்பீட்டு ரீதியில்) இந்தியாவின் எதிர்காலத்திற்கு அனுகூலமானது. எவ்வாறுயினும், இலங்கையில் நிகழும் இத்தகைய அரசியற் பிரச்சினைகளை இந்தியா தனது சொந்த அரசியல் விடயமாகவே கருதும். இலங்கைத்தீவு இரு அரசுளாகப் பிரிபடுவதை இந்திய அரசு விரும்பாது விட்டாலும் இந்திய அரசினரின் விருப்பு, வெறுப்பையும் கடந்து தமிழீழப் போராட்டம் வளரக்கூடிய சூழ்நிலையே காணப்படுகின்றது. எப்படியோ இந்தியச் செல்வாக்கிலிருந்து இலங்கை அரசியலைப் பிரித்து நோக்க முடியாது. இலங்கையின் புவியியல் அமைவிடம் இதற்கோர் முக்கிய காரணமாகும். இன்று இலங்கை தென்னுசியாவில் சர்வதேச ரீதியான அரசியற் சர்ச்சைக் குரிய நாடாய் மாறியுள்ளது. எவ்வாறுயினும், இலங்கைத்தீவைத் தென்னுசிய புவிசார் அரசியல் அடிப்படையிலிருந்து பெருமளவு நோக்க வேண்டியது தவிர்க்கமுடியாததாகும்.

# முடிவுரை

இலங்கையின் மொத்த வரலாறு பற்றிய முடிவுரையை நோக்க முன்பு அதற்கு உதவும் வகையில் முதலில் ஒவ்வொரு கட்சியைப் பற்றியும் சுருக்கமான சில முடிவுகளை நோக்குவோம் ஐ. தே. கட்சி ஓர் தீவிர வலதுசாரிக் கட்சியாகும்; இதனிடம் தேசியப்பண்பு இருப்பதை விட ஏகாதிபத்தியத்துடனுன கூட்டே அதிகமானதாகும். இது இனவாதத்தைத் தனது கருவியாகக் கொண்ட ஓர் கட்சியாகும்; ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி என்றவுடனே S. W. R. D. பண்டாரநாயக்காவே முதலில் ஞாபகத்திற்கு வருவார். இவரிடம் தேசியமயமாக்கம், ஏகாதிபத்திய எதிர்ப்பு போன்ற முற்போக்கான கொள்கைகள் இருந்துள்ள போதிலும், அடிப்படையில் இவர் ஓர் முதற்தரச் சந்தர்ப்பவாதியாவர். இவரதும் இவரது கட்சியினதும் கருவி இனவாதமாகும்.பண்டாரநாயக்கா மாக்கிஸ்ட் அல்லாத ஓர் 'இடதுசாரி' என்று முத்திரை குத்தப்பட்ட போதிலும் இவர் ஓர் இனவாத சந்தர்ப்பவாதியாவார் இவர் பசப்புச் சோஷலிஸம் பேசி சோஷலிஸக் கொள்கையை குழிதோண்டிபுதைத்தநபராவர்.அடுத்து இலங்கையில் காணப்பட்ட மாக்ஸிஸ இடதுசாரிகள் புரட்சிகர தன்மையற்றவர்களாய்க் காணப்பட்டனர். இவர்கள் அடிப்படையிற் தொழிற்சங்கவாதத் தன்மையுள்ளவர்களாகவே காணப்பட்டனர். இவர்கள் அடிப்படையில் பெருமளவிற்கு இனவாதிகளல்ல ஆனுல், 1960 ம் ஆண்டுகளின் ஆரம்பத்திலிருந்து இவர்கள் இன வாதத்துக்குள் சரணடைந்துவிட்டனர். 1950 ம் ஆண்டுகளின் முற் பகுதியில் மாக்ஸிஸ இடதுசாரிகள் ஆட்சி அதிகாரத்திற்கு வரக்கூடிய சூழ்நிலைகள் இருந்தபோதிலும் (1953 ம் ஆண்டு ஹர்த்தால்) இவர்களிடம் புரட்சிகரத் தன்மை காணப்படாமையால் இச் சந்தர்ப்பத்தைக் கை நழுவவிட்டனர். பின்பு சோஷஸிஸம் என்று சொல்லி பண்டாரநாயக்கா எழுச்சிபெறத் தொடங்க இம் மாக்ஸிஸ இடதுசாரிகள் படிப்படியாக வீழ்ச்சியடையத் தொடங்கினர். இலங்கை வரலாற்றில் மாக்ஸிஸ இடதுசாரிகளைத் தோற்கடிப்பதில் அதிக பங்கு வகித்தது தீவிர வலதுசாரியாகிய ஐ. தே. கட்சி என்று சொல்வதைவிட சந்தர்ப்பவாத இடதுசாரிக் கொள்கை பேசிய பண்டாரநாயக்காவினது எழுச்சியும், மாக்ஸிஸ

www.tamilarangam.net

இடதுசாரிக் கட்சிகளிடையே காணப்பட்ட பிளவு
மேயாகும். பொதுவாக, சுருக்கமாகச் சொல்வதாயின் இலங்கை
யில் இடதுசாரிகளைத் தோற்கடித்தது வலதுசாரிகளல்ல; ''இடது
சாரிகள்தான்''. இவ்வாறு பாராளுமன்றப் பாதையிலான 'இடது
சாரிகளின்' தோல்வி அமைய, ஆயுதம் தாங்கிய மாக்ஸிஸ 'இடது
சாரியாக' ஜனதா விமுக்திப் பெரமுனை தோன்றியது. இது இன
வாதப் பண்புமிக்க ஓர் ஸ்தாபனமாகும். செத்துப் பிறந்த குழந்தை
யாகவே ஜே. வி. பி. யின் ஆயுதப் போராட்டம் பிறந்தது ஆயுதம்
தாங்கிய சோஷலிஸப் புரட்சிக்கு ஓர் கெட்ட உதாரணமாக ஜே. வி.
பி. அமைந்தது. ஜே. வி. பி. யிடம் சோஷலிஸம் என்பது மருந்துக்கு
மில்லை. மாறாக, இளம் இரத்தத் துடிப்பு மிக்க ஆயுதம் தாங்கிய ஓர்
குப்பாடிக் கூட்டமாக ஜே. வி. பி. காணப்பட்டது.

இனித் தமிழ்மக்கள் பக்கமிருந்து எழுந்த தலைமைகளை நோக்கு
வோம். 1930 களின் ஆரம்பத்தில் வடபகுதியில் யாழ்ப்பாணவாலி
பக்காங்கிரஸ் என்னும் முற்போக்கான ஸ்தாபனம் எழுச்சி பெற்றது.
இக்காலத்தில் இலங்கையிற் காணப்பட்ட சகல ஸ்தாபனங்களுள்ளும்
இது ஓர் முற்போக்கான ஸ்தாபனமாகும். இத்தாபனத்திடம் இன
வாதம் என்பது மருந்துக்கும் இருக்கவில்லை. இலங்கையில் அக்கால
கட்ட வரலாற்றில் யதார்த்தத்தை மீறிய அதி தீவிரமான பகிஷ்
கரிப்பில் (இலங்கை முழுவதற்குமான பொறுப்பாட்சி கோரிப்
பகிஷ்கரிப்பு) ஈடுபட்டு அதிமோசமான தோல்வியை அடைந்தது.
இதனைத் தோற்கடித்ததில் ஜி. ஜி. பொன்னம்பலத்திற்கும் தென்
பகுதி அரசியல்வாதிகள் பலருக்கும் பங்குண்டு. இப் பகிஷ்கரிப்பை
எதிர்த்து பொன்னம்பலம் வெற்றி கண்டதோடு பொன்னம்பலத்
தின் எழுச்சி உதயமாகியது. பொன்னம்பலம் சிங்கள – பௌத்த
மேலாதிக்கம் போல ஓர் தமிழ் மேலாதிக்கக் கொள்கையுடையவ
ரல்ல. ஆயினும் மேலாதிக்க வாதமல்லாமல் தமிழ் இனவாதக்
கோஷத்தை உச்சரித்தே இவர் அரசியலில் வளர்ந்தார். (இனமேலா
திக்க வாதமென்பது சிங்கள இனம் மட்டுமே இந் நாட்டில் ஆதிக்
கத்திற்குரிய இனம் என்னும் வாதம்) அகில இலங்கைத் தமிழ்க்
காங்கிரஸ், இலங்கை சமஷ்டிக்கட்சி (தமிழரசுக்கட்சி) என்பன
இனமேலாதிக்கவாதக் கட்சிகளல்ல. ஆயினும் இனவாதக் கோஷங்
களை அரசியலிற் பயன்படுத்திய கட்சிகளாகும். இவ்விருகட்சிகளும்
கொழும்பை மையமாகக் கொண்ட வலதுசாரிக் கட்சிகளாகும்.
தமிழ்க் காங்கிரசை விடத் தமிழரசுக்கட்சி சற்றுமுற்போக்கானது.
தமிழரசுக் கட்சியின் சமஷ்டிக் கோரிக்கை மிகவும் சரியானதும்
முற்போக்கானதுமான கோரிக்கையாகும். அது நிறைவேறாமையி
னால் தவிர்க்க முடியாதவாறு தமிழீழப் போராட்டம் வளர்ந்துள்
ளது. தமிழ்க்காங்கிரஸ், தமிழரசுக்கட்சி ஆகிய கட்சிகள் பேச்சிற்
தீவிரமும், செயலிற் சமரசம் செய்யும் போக்கையும் கொண்ட
கட்சிகளாகும். இவ்விரு கட்சிகளும் இணைந்தே தமிழர் விடுதலைக்
கூட்டணி என்ற அமைப்பாய் உள்ளது. குமார் பொன்னம்பலம்

தமிழ்க் காங்கிரஸ் கட்சிக்கு தன் பிதாவழி வாரிசுரிமை எடுத்தி
ருக்கின்றபோதிலும் காங்கிரஸ் என்னும் ஓர் கட்சிக்கு எவ்வித
வலுவுமில்லை. அர்த்தரீதியாகப் பார்க்குமிடத்து அது தமிழர்
விடுதலைக் கூட்டணியிற் சங்கமித்து விட்டதென்றே கூறவேண்டும்.
(மலையக மக்கள், முஸ்லிம் மக்கள் ஆகியோரின் அரசியல்
வரலாற்றை எழுதஎனக்கு வசதியில்லாமைக்கு வருந்துகிறேன்)

மிதவாதச் சமரசத் தமிழ் தலைமைகளின் இயலாமையைத்
தொடர்ந்து தமிழீழப் போராட்டத்திற்கான ஆயுதம் தாங்கிய
இளைஞர் தலைமைகள் தோற்றம் பெற்றன. ஆயுதப் போராட்டம்
இவ் வியக்கங்களுக்கு சரியானதும் தவிர்க்க முடியாததுமாகும்.
ஆயுதம் மட்டும் அரசியல் என்ற கண்ணோட்டத்தைக் கொண்ட
இளைஞர் (யுவதிகள் உட்பட) இயக்கங்களாக மட்டுமே பெரு
மளவிற்குள்ளன. இவற்றிற் பெருமளவிலான ஸ்தாபனங்கள் செறி
வாகத் தாக்குதல்களில் ஈடுபட்டுள்ளன. பொதுவாக இவ்வியக்
கங்கள் வலதுசாரி முகாமிலிருந்தே தோற்றப்பெற்ற இயக்கங்களாக
இருக்கின்ற போதிலும் மாக்ஸிஸ இடதுசாரிக் கொள்கையின்
அடிப்படையிலான சோஷலிசத் தமிழீழ அரசை அமைப்பதே
தமது இறுதி இலட்சியமென்று கூறிக் கொள்கின்றன.

கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலம் தொட்டு தென்னிந்தியா
விலிருந்து இலங்கைத் தீவுக்கு குடியேறிய மக்களிலிருந்து தோற்றம்
பெற்ற இரு பிரிவினரே இலங்கை வாழ் சிங்கள மக்களும், தமிழ்
மக்களுமாவர். பெருமளவான, இலங்கை வாழ் முஸ்லிம்கள்
அவ்வாறு கி. பி. 14-ம், 15-ம் நூற்றாண்டுகளில் தென்னிந்தியா
விலிருந்து இலங்கை வந்தோராவர். மலையகமக்களும் அவ்வாறு
கி. பி. 19-ம் நூற்றாண்டில் இலங்கைக்கு பெருந்தோட்டப் பயிர்ச்
செய்கைக்காக தென்னிந்தியாவிலிருந்து அழைத்து வரப்பட்ட
மக்களேயாவர். மேலும் காலத்திற்குக் காலம் தென்னிந்தியா
விலிருந்து வந்த மக்களில் ஒரு பகுதியினர் சிங்கள மக்களோடு
இணைந்து சிங்கள மக்களாக மாறியுள்ளனர். மறுபகுதியினர் தமிழ்
மக்களோடு இணைந்துள்ளனர். எனவே, அடிப்படையில் நோக்கும்
போது இலங்கையில் வாழும் சகல மக்களும் தென்னிந்தியா
விலிருந்து வந்து குடியேறிய தென்னிந்திய மக்கள் கூட்டத்திலிருந்து
உருவாகியவர்களாவர்.

ஆதியில் இலங்கை வரலாற்றில் இனவாதமென்பது இருக்க
வில்லை. கி. மு. மூன்றாம் நூற்றாண்டிலிருந்தே சிங்களவரும்,
தமிழரும் பொதுவாக பௌத்தமதத்தைத் தழுவி வாழ்ந்துள்ளனர்.
கி. பி. ஆறாம் நூற்றாண்டில் தென்னாசியாவில் பௌத்தமதம் அருகத்
தொடங்கிய சூழ்நிலையில், தென்னிந்தியாவில் பௌத்தம் அருகி
இலங்கைத் தீவிலுள்ள தமிழரும் இந்து சமயத்தில் ஆர்வம் காட்டும்
சூழ்நிலையில் பௌத்தத்தை இலங்கைத் தீவில் பாதுகாக்கும் நோக்கத்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தோடு இனவாதக் கண்ணேட்டத்துடன் பௌத்த குருவாகிய மகாநாமதேரோ என்பவரால் கி. பி. 16-ம் நூற்றுண்டில் மகாவம்சம் எனும் நூல் எழுதப்பட்டது. இந்நூலின் கருத்துப்படி இலங்கைத் தீவானது பௌத்தத்தைப் பேணி வளர்ப்பதற்காகப் புத்தபிராணுல் தேர்ந்தெடுக்கப்பட்ட நாடு என்றும், சிங்கள - பௌத்தர்களுக்கே இந்நாடு உரியதென்றும், சிங்களவர் ஆரிய இனத்தவரென்றும் கூறப்பட்டுள்ளது. இக்கருத்தைப் பௌத்த நிறுவனம் பிற்காலத்தில் பேணிவந்தது. தென்னிந்தியாவிலிருந்து காலத்திற்குக் காலம் மேற்கொண்டு வந்த படையெடுப்புக்களைத் துணையாகக் கொண்டு இவ்வினவாதக் கருத்தை மேலும் வளர்த்தெடுத்துள்ளனர். இலங்கையிலுள்ள சகல இனவாத அரசியல்வாதிகளும் தமது தேவைகளுக்கும், நலன்களுக்குமேற்ப இவ்வினவாதத்தைப் பயன்படுத்தியுள்ளனர். மேலும் பிரித்தானிய காலனித்துவ ஆதிக்கமும், இலங்கையின் அரசியற் பொருளாதார அமைப்பும் இனமேலாதிக்க வாதத்தை இனவாதிகள் வளர்க்க ஏதுவாய் அமைந்தன

ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆகிய இரு பெரும் கட்சிகளும் தமது அரசியற் பதவிப் போட்டிக்கு இனவாதத்தையே கருவியாகக் கொண்டு செயற்பட்டு வந்தன. கட்சிகளுக்கிடையேயான போட்டியில் மட்டுமன்றி கட்சிக்குள்ளேயான பதவிப்போட்டிகளிலும் இன்று இனவாதமே கருவியாக பயன்படுத்தப்படுகின்றது. உதாரணமாக, இன்று ஐ. தே. கட்சிக்குள் பிரேமதாஸ, லலித் என்போரிற்கிடையேயான போட்டியில் இனவாதம் வகிக்கும் பாத்திரத்தைக் குறிப்பிடலாம்.

ஐக்கிய தேசியக் கட்சியால் இனப்பிரச்சனையைத் தீர்க்க முடியாதென்பதற்கு இரு காரணங்கள் உண்டு. முதலாவது காரணம் பௌத்த நிறுவனமும், ஐ. தே. கட்சி உட்படக் சிங்கள இனவாத அரசியல்வாதிகளும் சிங்கள மக்களை கொடூரமாக இனவாதமயப்படுத்தியுள்ளார்கள். தமிழ் மக்களிற்கு அற்ப, சொற்ப உரிமைகள் தானும் கொடுப்பது சிங்கள மக்களிற்கான அழிவாகவே முடியுமென்று போதித்தவர்களால் ஏதாவது உரிமை வழங்குவதற்கு என்ன நியாயத்தைத் தான் சிங்கள மக்களிற்குச் சொல்ல முடியும்? 1957-ம் ஆண்டு செல்வநாயகத்துடன் பண்டாரநாயக்கா பிரதேச சபைகள் தருவதாக ஒப்பந்தம் செய்ததும் அது தமிழருக்கான தனிநாட்டிற்கும், சிங்கள மக்களின் அழிவிற்குமான முதற்படி என்று (First Step) ஓர் நூலை வெளியிட்ட ஐ. தே. கட்சியால் எப்படித்தான் சொற்ப உரிமையாவது கொடுக்க நியாயம் சொல்ல முடியும்? அதே வேளை மறுபுறம் ஸ்ரீ. ல. சு. கட்சியோ, பௌத்த நிறுவனங்களோ இதனைப் பார்த்துக் கொண்டிருக்க மாட்டாது. பொதுவில், ஐ. தே. கட்சியால் மட்டுமன்றி எந்தவொரு சிங்களக் கட்சியாலும் இனப்பிரச்சினையைத் சுமூகமாக தீர்த்து வைக்க முடியாது. பௌத்த நிறுவனங்களையும், சிங்கள மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றுள்ள அரசியல் கட்சிகளையும் தோற்கடித்து சிங்கள மக்கள் மத்தியில் இனவாத விரோத முற்போக்குச் சக்திகள் ஆதிக்கம் பெறுவதற்கான சாத்தியக் கூறுகள் தற்போதைய நிலையிற் தெரியவில்லை.

ஐக்கிய தேசியக் கட்சியால் இப்பிரச்சினையைத் தீர்க்க முடியாததென்பதற்கான இரண்டாவது காரணம் முதலாளித்துவக் கொள்கை மிக்க இந்த ஆட்சியாளர் மேலும் நேரடியாக அமெரிக்க ஏகாதிபத்தியத்துடன் கூட்டுச் சேர்ந்துள்ளனர். இந்த அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்தியத்தின் வருகையால் இலங்கைவாழ் மக்கள் படிப்படியாக பொருளாதாரம், கலாச்சாரம் என்பவற்றில் துயரநிலையை அடைந்து செல்கின்றனர். இப்பிரச்சினைகள் மக்கள் மத்தியில் ஐ. தே. கட்சிக்கு எதிர்ப்பைக் கொண்டு வருவது இயல்பு. இந்த வகையில், தோன்றக் கூடிய நெருக்கடியிலிருந்து தமது ஆட்சியைப் பாதுகாப்பதற்கு இனவாதத்தை விட்டால் ஐ. தே. கட்சிக்கு வேறு வழியில்லை. எனவே, சிங்கள மக்களை அவர்களின் இனவாதப் பிடியிலிருந்து விடுவிப்பதோ அல்லது இனப்பிரச்சனையைத் தீர்ப்பதோ ஐ. தே. கட்சிக்கும், அதைச் சார்ந்துள்ள ஏகாதிபத்திய நலன்களுக்கும் தற்கொலைக் கொப்பான விடயமாகும். எனவே இந்த இடத்தில் ஐ. தே. கட்சி இனவாதத்தைக் கைவிடாமல் அதனைத் தூக்கிப் பிடித்துக் கொண்டும், அதே வேளை தமிழ் மக்களின் போராட்டம் தலையை மீறிப் போகவிடாமற் தடுப்பதற்குமான முயற்சிகளில் ஈடுபடுவது இயல்பு. இவ்வகையான முயற்சிகளில் ஒன்று தான் 1981-ம் ஆண்டு கொண்டு வரப்பட்ட மாவட்ட அபிவிருத்திச்சபைகளும், 1984 டிசம்பரில் முன்வைக்கப்பட்டுள்ள மாகாணசபைகளும், பாராளுமன்றத்தில் இரண்டாவது சபையான அரசாங்க சபை போன்றவையாகும். எனவே, அரைகுறையாகவாயினும் ஒரு சமரசத்திற்கு வரவேண்டிய தேவை ஐ. தே. கட்சிக்கும், ஏகாதிபத்தியத்திற்குமுண்டு.

எனவே, தமிழரின் பிரச்சினையை சமாதான முறையில் சரியாக ஒரு போதும் தீர்த்துவைக்க முடியாது. சிங்கள-பௌத்த மேலாதிக்க இனவாதமும், அதனுடன் இணைந்துள்ள ஏகாதிபத்தியமும் இந்த மண்ணில் பலாத்காரமாகத் தோற்கடிக்கப்பட்டாலொழிய வேறு வழியில் தமிழ் மக்களிற்குத் தீர்வில்லை. எனவே, சிங்கள - பௌத்த மேலாதிக்க இனவாதத்தையும், அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்தியத்தையும் இந்த மண்ணில் பலாத்காரமான முறையிற் தோற்கடிப்பதுதான் இன்றுள்ள ஒரேயொரு மார்க்கமாகும். இந்த வகையிலான தமிழீழப் போராட்டத்தின் வெற்றியே உண்மையில் சிங்கள மக்களிற்கும் விமோசனம் அளிக்கக்கூடியதாய் அமையும். இப்பிரச்சினையில் இந்திய அரசும் ஓர் அரைகுறைத் தீர்வுக்கே முன்வரக் கூடும். ஆனல், அதனையும் மீறித் தமிழீழப் போராட்டம் முன்னேறுவதனல்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மட்டுமே இதற்கு உண்மையான தீர்வுண்டு. தமிழீழப் போராளிகள் இந்திய அரசில் மட்டும் தங்கிநிற்காமல் தென்னிந்திய மக்களிலும், பரந்த இந்திய மக்களிலும் தங்கிநிற்க வேண்டும் அல்லது இந்திய ஆட்சியாளரால் இறுதியில் அரைகுறையாக ஏமாற்றப்படுவதில் முடியும்.

மொத்தமாய் பார்க்கின்றபோது இலங்கைத் தீவின் வரலாற்றையும், இன்று இலங்கையில் ஏற்பட்டிருக்கும் இனரீதியான பிரச்சினைகளையும் தென்னாசிய வரலாற்றில் இருந்து பிரித்து நோக்க முடியாது. தென்னாசியாவின் இன்றைய சூழ்நிலையில் தமிழீழ விடுதலைப் போராட்டம் ஓர் புரட்சிகரமான பாத்திரத்தை வகிக்கின்றது. தென்னாசியா முழுவதின் விடிவுக்கும் வழிகாட்டக் கூடிய உன்னதமான புரட்சிகர வரலாற்றுத் தன்மையைத் தமிழீழப் போராட்டம் கொண்டுள்ளது. தமிழீழ விடுதலைப் போராட்டம் தனது புரட்சிகரமான பாதையில் வெற்றியீட்டக் கூடியதற்கான வரலாற்று அடிப்படைகள் தென்னாசியச் சூழ்நிலையில் நிறையக் காணப்படுகின்றன. இதன் வெற்றி இதனைச் சரிவர அணுகுவதிலேயே அடங்கியுள்ளது.

●

மனிதன் குரங்கிலிருந்து தோன்றியவன்
என்பதை அறிவதன் நோக்கம்
மீண்டும் குரங்காய் மாறுவதற்கல்ல;
அதன் வளர்ச்சி விதியை விளங்கி
மேலும் வளர்வதற்கே!

www.tamilarangam.net

இலங்கையின் வரலாற்றகாதியில்
பெரும்பான்மை இனம் புரியும்
இன ஒடுக்குமுறைக்குப் பெயர் "தேசிய ஐக்கியம்"
சிறுபான்மை இனங்கள்
இன ஒடுக்குமுறையை எதிர்ப்பதற்குச்
சூட்டப்படும் பெயர் "வகுப்புவாதம்"

தமிழ் மறுமலர்ச்சி சங்கம்
TIMIL MARUMALARCHI SANGAM
42 ALBANY STREET
LONDON NW1 4EA
01 387 4739

